இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அழைப்புப் பணியை சூழ்ந்துள்ள சந்தேகங்களுக்கான மறுப்பு

ஆசிரியர்:
அல்லாமா டாக்டர் ஸாலிஹ் இப்னு ஃபவ்ஸான் அல் ஃபவ்ஸான் (ஹபிழஹுல்லாஹ்)

தமிழாக்கமும் வெளியீடும்:
islamiyapuram.blogspot.com

வெளியீடு இல: 10 (28/முஹர்ரம்/1445)
தலைப்பு: இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹி) அவர்களின் தஃவாவை சூழ்ந்துள்ள சந்தேகங்களுக்கான மறுப்பு
ஆசிரியர்: அல்லாமா டாக்டர் ஸாலிஹ் இப்னு ஃபவ்ஸான்
தமிழாக்கமும் வெளியீடும்: islamiyapuram.blogspot.com

இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் தாஃவாவை சூழ்ந்துள்ள சந்தேகங்களுக்கான மறுப்பு

மறுப்புரை வழங்கியவர்:

அல்லாமா டாக்டர் ஸாலிஹ் இப்னு ஃபவ்ஸான் அல் ஃபவ்ஸான்

தமிழாக்கமும் வெளியீடும்:

islamiyapuram.blogspot.com

உள்ளடக்கம்

அறிமுகம்

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால்..

எல்லாப் புகழும் படைப்புகளின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியது. அவன் தனது தூதரை வழிகாட்டுதலைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் மற்ற எல்லா மார்க்கங்களையும் விட மேலோங்கச் செய்யும் பொருட்டு அனுப்பிவைத்தான்; இணைவைப்பாளர்கள் அதை வெறுத்த போதிலும். மேலும் அல்லாஹ்வின் ஈடேற்றமும் அருளும் பின்வருமாறு கூறிய எங்கள் தூதர் முஹம்மது மீது உண்டாவதாக:

"நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்த உம்மத்திற்கு அதன் மார்க்கப் புரிதலைப் புதுப்பிக்கும் ஒருவரை அனுப்புவான்." (அபூ தாவூத் 4291, ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா அல்பானி 599)

அல்லாஹ்வின் புத்தகத்தின்பால் அழைத்து, மக்களுக்கு அறிவொளியூட்டுபவர்களாக, அல்லாஹ் ஒவ்வொரு சகாப்தத்திலும் அறிஞர்களிலிருந்து எஞ்சியிருப்பவர்களை ஆக்குகிறான். அவர்கள் ஏனையோரை அழைக்கிறார்கள்.

اِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَاِنَّا لَهٗ لَحٰـفِظُوْنَ

நிச்சயமாக நாம்தான் (திக்ரு என்னும் இவ்)வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம், நிச்சயமாக நாமே அதனை பாதுகாப்பவர்கள்.
(அல்குர்ஆன்: 15:9)

மேலும் நபி (ஸல்) அவர்களின் கூற்று:

என்னுடைய உம்மத்தில் இருந்து ஒரு கூட்டம் ஒரு போதும் நின்றுவிடாது சத்தியத்தை வெற்றிகரமாகக் கடைப்பிடித்த வண்ணம் இருப்பார்கள்,

அல்லாஹ்வின் காரியம் (இறுதி நாள்) வரும் வரை அவர்களைக் கைவிடுபவர்களால் அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது." (திர்மிதி 2229)

மேலும் இவ்வாறான இமாம்களிலிருந்தும், மார்க்கத்திற்குப் புத்துயிரளிப்பவர்களிலுமிருந்தும் உள்ளவர்தான்:

ஷெய்க், இமாம், அறிஞர், ஷைகுல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹிமஹுல்லாஹ் - அல்லாஹ் அவர் மீது கருணை காட்டுவானாக) ஆவார்கள்.

நிச்சயமாக அவர் இந்த மார்க்கத்தைப் புதுப்பித்தவர் ஆவார்; இந்த புதுப்பித்தலானது இந்த மண்ணிலும் (ஸவூதி அரேபியா), இந்த மண்ணிற்கு வெளியேயும் நீட்டிக்கப்பட்டது.

இவை அனைத்திற்கும் காரணம் நன்மை பயக்கும் அறிவு ஆகும். தனது எண்ணத்தை தூய்மைப்படுத்தி, தனது இதயத்தையும் தூய்மைப்படுத்தும் ஒவ்வொரு ஆசிரியரையும், எதிரிகள் எவ்வாறு அவருக்கு எதிராக ஆத்திரத்தைக் கொட்டினாலும், நிச்சயமாக உயர்ந்தோனாகிய அல்லாஹ் அவரை உம்மத்தின் மீது ஓர் புகழத்தக்க விளைவை ஏற்படுத்தும் காரணியாக ஆக்கிவைப்பான். இந்த இமாம் மற்றும் இவரது அழைப்புப் பணிக்கு எதிராக அவர்கள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும், நிச்சயமாக சூரியன் நடுப்பகுதியில் மறைக்கப்படாது.

அல்லாஹ் அவனுடைய மார்க்கத்திற்கு உதவுவான், யார் வெறுத்தாலும் பொய்யை விட சத்தியத்தை மேலோங்கச் செய்வான். இது மிக உயர்ந்தோனான அல்லாஹ்வின் சுன்னாவாகும். வழிகெட்ட அழைப்பாளர்கள் மூலம் அவன் தனது அடியார்களை பரீட்சித்து சோதிக்கிறான்; வழிகெட்ட அழைப்பாளர்களான அவர்கள் சத்தியத்தையும் அதன் அழைப்பாளர்களையும் முகத்திற்கு நேராக எதிர்ப்பவர்கள். சத்தியத்தை உடைய மக்களுக்கு நல்ல முடிவு

கிடைக்கும் அதே வேளை, பொய்யை உடைய மக்களுக்குத் தண்டனை கிடைக்கும்.

இறைத்தூதர்களுக்கு (அல்லாஹ்வின் அருளும் ஈடேற்றமும் அவர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக) அவர்களின் தாஃவாவைத் (அழைப்புப் பணியைத்) தடுக்கும் எதிரிகள் இருந்தனர். உயர்ந்தவனான அல்லாஹ் கூறியது போல்:

وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِىٍّ عَدُوًّا مِّنَ الْمُجْرِمِيْنَ‌ؕ وَكَفٰى بِرَبِّكَ هَادِيًا وَّنَصِيْرًا

இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், குற்றவாளிகளிலிருந்து பகைவரை நாம் ஆக்கினோம், நேர் வழிகாட்டுபவனாகவும், உதவி செய்பவனாகவும் இருக்க (நபியே!) உம் இரட்சகன் (உமக்குப்) போதுமானவன்.
(அல்குர்ஆன்: 25:31)

மேலும் உயர்ந்தவனான அல்லாஹ் கூறினான்:

وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِىٍّ عَدُوًّا شَيٰطِيْنَ الْاِنْسِ وَالْجِنِّ يُوْحِىْ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا‌ ؕ وَلَوْ شَآءَ رَبُّكَ مَا فَعَلُوْهُ‌ فَذَرْهُمْ وَمَا يَفْتَرُوْنَ

மேலும், இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும், ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம், அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான (பொய்க்) கூற்றுக்களை ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர், மேலும், உம்முடைய இரட்சகன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள், ஆகவே, (நபியே!) நீர் அவர்களையும் அவர்கள் கற்பனை செய்து கொண்டிருப்பவைகளையும் விட்டுவிடுவீராக!
(அல்குர்ஆன்: 6:112)

وَلِتَصْغٰۤى اِلَيْهِ اَفْـِٕدَةُ الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِالْاٰخِرَةِ وَلِيَرْضَوْهُ وَلِيَقْتَرِفُوْا مَا هُمْ مُّقْتَرِفُوْنَ

மறுமையை நம்பாதோரின் இதயங்கள் (ஷைத்தானின் அலங்காரமான பொய்க்கூற்றுக்களாகிய) அதற்குச் செவி சாய்ப்பதற்காகவும், அதனை அவர்கள் பொருந்திக் கொள்வதற்காகவும், அவர்கள் எதைச்

செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்களோ அதனை அவர்கள் செய்வதற்காகவுமே (இவ்வாறு ஷைத்தான்கள் மயக்கி வந்தனர்)
(அல்குர்ஆன்: 6:113)

اَفَغَيْرَ اللّٰهِ اَبْتَغِىْ حَكَمًا وَّهُوَ الَّذِىْۤ اَنْزَلَ اِلَيْكُمُ الْـكِتٰبَ مُفَصَّلاً‌ ؕ وَالَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْلَمُوْنَ اَنَّهٗ مُنَزَّلٌ مِّنْ رَّبِّكَ بِالْحَـقِّ‌ فَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ

"அல்லாஹ் அல்லாதவனையா தீர்ப்பாளனாக நான் தேடுவேன்" அவனே இவ்வேதத்தை விவரிக்கப்பட்டதாக உங்களுக்கு இறக்கி (அருளி)யிருக்கிறான்" (என்று நபியே! நீர் கூறுவீராக! இதற்கு முன்னர்) எவர்களுக்கு நாம் வேதம் கொடுத்திருக்கின்றோமோ அத்தகையவர்கள் இது நிச்சயமாகவே உம் இரட்சகனிடமிருந்து உண்மையைக் கொண்டே இறக்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாக அவர்கள் அறிவார்கள், ஆகவே, சந்தேகப்படுவோரில் நிச்சயமாக நீர் (ஒருவராக) ஆகிவிடாதீர்.
(அல்குர்ஆன்: 6:114)

இவ்வாறே இது அல்லாஹ்வின் படைப்புடன் கூடிய அல்லாஹ்வின் சுன்னாவாகும். ஒவ்வொரு முறையும் சத்தியத்தை நோக்கி அழைப்பவர் ஒருவர் தோன்றும் போது, பொய்யிலிருந்து அழைப்பவர் ஒருவர் அவருக்கு எதிராக நிற்கிறார். ஆனால் சத்தியம் அதன் பாதையை எடுத்துக் கொண்டு நீடித்திருக்கிறது. வழிகேட்டில் நடக்க அழைப்பவர்களுக்கு; அவர்களின் தாக்கங்கள் மற்றும் செல்வாக்கு துண்டிக்கப்பட்டு அவர்களின் தகவல்கள் மறைந்துவிடுகிறது.

فَاَمَّا الزَّبَدُ فَيَذْهَبُ جُفَآءً‌ ۚ وَاَمَّا مَا يَنْفَعُ النَّاسَ فَيَمْكُثُ فِى الْاَرْضِ‌ؕ

எனவே, (அழுக்கு) நுரையோ வீணாகிப் போய்விடுகிறது, (ஆனால்,) மனிதர்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதோ பூமியில் தங்கி விடுகிறது"
(அல்குர்ஆன்: 13:17)

இந்த இமாம், அவர்தான் ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் இப்னு அலி இப்னு ஸுலைமான் அல் முஷாரபி அத் தமீமி ஆவார்கள். அவர் ஹிஜ்ரத்திற்குப் பிறகு 1115 ஆம் ஆண்டு நஜ்த் மண்ணில் பிறந்தார்.

அவர் தனது தந்தை மற்றும் பாட்டனார்கள், அவரது தந்தையின் சகோதரர்கள் மற்றும் அவரது ஊரில் இருந்த அறிஞர்கள் மத்தியில் அறிவு சூழலில் வளர்ந்தார். அவருடைய ஊரில் ஏராளமான அறிஞர்கள் இருந்ததால், அவர் அவர்களிடமிருந்து கல்வியைக் கற்றார், அவர்களிடமிருந்து சட்டத்தின் பல்வேறு கலைகளை எடுத்துக் கொண்டார். ஆனால் அவர் இதனுடன் போதுமாக்கிக் கொள்ளவில்லை, மாறாக அவர் ஹிஜாஸுக்குப் பயணம் செய்து மக்காவை அடைந்தார். அங்கு அவர் அந்நாட்டு அறிஞர்களிடம் அமர்ந்து கல்வி கற்றார். பின்னர் மதீனாவுக்குச் சென்று அங்குள்ள அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களிடமிருந்து பயனடைந்தார்.

பின்னர் அவர் ஹஜ்ஜிலிருந்து திரும்பிய பிறகு அல் அஹ்ஸாவிற்குச் சென்றார். இந்த மண்ணில் ஹனஃபி, மாலிகி, ஷாபிஈ மற்றும் ஹன்பலி ஆகிய நான்கு சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்த அறிஞர்கள் இருந்தனர். அவர் அவர்களிடமிருந்து இஸ்லாமிய சட்ட அறிவை எடுத்துக் கொண்டார், மேலும் அவர் தனது கையால் நகலெடுத்த ஏராளமான புத்தகங்கள், அவர்களின் நூலகத்தில் கிடைத்த புத்தகங்கள் மற்றும் ஆதாரங்களைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு சுமந்து சென்றார். பிறகு அல் பஸ்ராவுக்குச் சென்று ஈராக் அறிஞர்களைச் சந்தித்தார். அவர்களிடமிருந்து இஸ்லாமிய சட்டவியல், அரபு மொழி மற்றும் அதைத் தவிர மற்ற அறிவை எடுத்துக் கொண்டார். அவர் ஹதீஸ் அறிஞர்களிடமிருந்து, குறிப்பாக முஹம்மது ஹயாத் அஸ் ஸிந்தீ அல் மதனியிடம் இருந்து ஹதீஸ் கலை அறிவை எடுத்துக் கொண்டார்.

இவ்வாறே இம்மண்ணிலிருந்தும் பிற நாட்டிலிருந்தும் அறிவை எடுத்துக் கொண்டார். அறிவை அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிஞர்களிடமிருந்து எடுத்துக் கொண்ட அவர், ஒரே நிலத்திலிருந்து மட்டும் அறிவை எடுத்துக் கொள்வதுடன் போதுமாக்கிக் கொள்ளவில்லை. மாறாக அவர் இவ்வாறான பல்வேறு நிலங்களுக்கு அறிவைத் தேடி பயணம் செய்தார். இதற்குப் பிறகு அவர் ஷாமுக்குப்

பயணம் செய்ய எண்ணினார்; ஷாமில் ஹன்பலி சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்த அறிஞர்கள் இருந்தனர். அவர் ஷாமிற்கான தனது பயணத்தைத் தொடங்கினார், ஆனால் ஆபத்துகள் மற்றும் பயணத்தின் சிரமம் காரணமாக இது அவருக்கு எளிதானதாக இருக்கவில்லை, மேலும் அவர் பயணத்திலேயே கிட்டத்தட்ட இறந்தும் விட்டார். பின்னர் அவர் தனது ஊருக்குத் திரும்பினார், மேலும் அவர் அப்போது நன்கு திறமையானவராகவும், அறிவு, ஃபிக்ஹ், தவ்ஹீத், தஃப்ஸீர், ஹதீஸ் மற்றும் மொழி ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றுவிட்டவராகவும் இருந்தார்; குறிப்பாக ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா மற்றும் அவரது மாணவர் இப்னுல் கய்யீம் ஆகியோரின் புத்தகங்களில். (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக)

இதேபோல் அல்லாஹ்வின் பாதையில் தாஃவா (அழைப்புப்பணி) செய்ய விரும்பும் ஒவ்வொருவரும் முதலில் கல்வியைக் கற்பது கட்டாயம் ஆகும். உயர்ந்தவன் அல்லாஹ் கூறினான்:

فَاعْلَمْ اَنَّهٗ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاسْتَغْفِرْ لِذَنْۢبِكَ وَلِلْمُؤْمِنِيْنَ وَ الْمُؤْمِنٰتِ ؕ وَاللّٰهُ يَعْلَمُ مُتَقَلَّبَكُمْ وَمَثْوٰىكُمْ

ஆகவே (நபியே!) நிச்சயமாக, அல்லாஹ்வைத் தவிர (வணக்கத்திற்குரிய வேறு) நாயன் இல்லை என்பதை நீர் **அறிந்துகொள்வீராக**! உம்முடைய பாவத்திற்காகவும், விசுவாசங்கொண்ட ஆண்களுக்காகவும், விசுவாசங்கொண்ட பெண்களுக்காகவும் பாவ மன்னிப்புக் கோருவீராக! இன்னும், (விசுவாசிகளே! பகலில்) உங்களுடைய செயல்பாட்டுக்குரிய இடத்தையும், (இரவில்) உங்கள் தங்குமிடத்தையும் அல்லாஹ் நன்கறிவான்.
(அல்குர்ஆன்: 47:19)

இவ்வாறே அவன் சொல் மற்றும் செயலைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன் அறிவைக் கொண்டு தொடங்கினான். மேலும் பாக்கியமிக்கோனும் உயர்ந்தோனுமாகிய அல்லாஹ் கூறினான்:

قُلْ هٰذِهٖ سَبِيْلِىْۤ اَدْعُوْۤا اِلَى اللّٰهِ ؔ عَلٰى بَصِيْرَةٍ اَنَا وَمَنِ اتَّبَعَنِىْ ؕ

(நபியே!) நீர் சொல்வீராக! “இதுவே என்னுடைய (நேரிய) வழியாகும்; நான் அல்லாஹ்வின் பால் (உங்களை) அழைக்கின்றேன்; நானும் என்னைப் பின்பற்றியவர்களும் **பஸீராவின்** மீதே இருக்கின்றோம்;
(அல்குர்ஆன்: 12:108)

பஸீரா என்றால் அறிவு என்று பொருளாகும். மேலும் உயர்ந்தோன் அல்லாஹ் கூறினான்:

اُدْعُ اِلٰى سَبِيْلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ وَجَادِلْهُمْ بِالَّتِىْ هِىَ اَحْسَنُ‌

(நபியே!) நீர் (மனிதர்களை) **விவேகத்ததைக்கொண்டு, மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டு** உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக!
(அல்குர்ஆன்: 16:125)

ஞானத்துடனும், நல்ல அறிவுறுத்தல்களுடனும் அழைத்து, சிறந்த முறையில் அவர்களுடன் விவாதம் புரியக்கூடிய அறிஞரால் அன்றி இவ்விவகாரங்கள் பூரணத்துவம் பெறாது. அறிவில் தேர்ச்சி பெற்ற ஒரு அறிஞரைத் தவிர வேறு யாரும் இதைச் செய்ய மாட்டார்கள். எனவே அவர் - ரஹிமஹுல்லாஹ் - முதலில் அறிவில் இந்த நிலையை அடைந்தார்; மேலும் அவர் அதைப் பல்வேறு வளம்மிக்க அறிஞர்களிடம் இருந்து எடுத்தார். அவர் சொற்பமானதைக் கொண்டு திருப்தியடையவில்லை, அவர் தனது இதயத்தில் மனப்பாடம் செய்து வைத்துக் கொண்ட அறிவுடன் போதுமாக்கிக் கொள்ளவில்லை, மாறாக அவர் தனது பேனாவால் நகலெடுத்த நன்மை பயக்கும் புத்தகங்களைச் சேகரித்தார், தன்னில் சேமித்து வைத்திருந்த நல்ல பொக்கிஷங்களை எழுதினார். அறிஞராகவும், மேலும் அல்லாஹ்வின் பாதையில் தஃவா செய்பவராகவும் ஆக விரும்புபவர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். அவர் அறிவை ஆயுதமாகத் தரிப்பது கொண்டு முதலில் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவர் திரும்பி வந்த போது தனது தந்தை அல் உயய்னாவை விட்டு வெளியேறி ஹுரைமிலாவுக்குச் சென்று அங்கு நீதிபதியாகச் செயல்படுகிறார் என்பதைத் தெரிந்து கொண்டார். எனவே அவர் தந்தையிடம் சென்று மக்களை உயர்ந்தோனாகிய அல்லாஹ்வின் பாதையை நோக்கி அழைக்கத் தொடங்கினார். அவர் வகுப்புகளை வழங்கத் தொடங்கினார், ஏனெனில் அவர் தனது பிரயாணங்கள் மற்றும் வெவ்வேறு நாடுகளுக்கான பயணங்களின் போது மக்கள் தவ்ஹீதை (ஓரிறைக் கோட்பாட்டை) அறியாதவர்களாகவும், அகீதாவில் (அடிப்படை நம்பிக்கைக் கோட்பாடுகளில்) இருந்து விலகியவர்களாகவும் இருப்பதைக் கண்டார். மேலும் அங்கே ஷிர்க்கின் பகிரங்கமான வெளிப்பாடுகள் மற்றும் உயர்வான அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றை வணங்கிவருதல் ஆகியனவும் இருந்தன.

ஆனால் அவருடைய காலத்தில் இருந்த மற்ற சில அறிஞர்கள் அமைதியாக இருந்தது போல் அவர் அமைதியாக இருக்கவில்லை. நஜ்தில் பல அறிஞர்கள் இருந்தனர், அவர்கள் அறிவில் சிறந்து விளங்கினர். ஆனால் அவர்கள் இந்தக் கடமையை நிலைநிறுத்தவில்லை; மாறாக மக்கள் எதன் மீது இருக்கிறார்கள் என்பது பற்றி அவர்கள் அமைதியாக இருந்தார்கள். அதற்கும் மேலாக அவர்களில் சிலர் மக்கள் எதன் மீது இருந்தார்களோ அதற்குத் துணைபோகக் கூடியவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் - ரஹிமஹுல்லாஹ் - இந்த சூழ்நிலையைக் கொண்டு மகிழ்ச்சியடையவில்லை.

மௌனமாக இருப்பதும், உம்மத்தை வழிகேடு, ஷிர்க், அறியாமை, அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கங்கள் போன்றவற்றில் அலையும்படி விட்டுவிடுவதும் அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே அவர் மஸ்ஜித் மற்றும் ஒன்றுகூடல்களில் அறிவுரைகளை வழங்கியும் மேலும் வகுப்புகள, ஆய்வுகள், புத்தகங்கள் மூலமாகவும் மிக உயர்ந்தவனான அல்லாஹ்வின் பாதையை நோக்கி மக்களை அழைக்கத் தொடங்கினார். ஹுரைமிலா தேசத்தில் ஊழல் செய்பவர்களையும் அவர்கள் செய்யும் தீய

செயல்களையும் கண்டு இந்த அறிஞர் - ரஹிமஹுல்லாஹ் - அவர்களை விமர்சித்தார். இதன் விளைவாக, அவர்கள் அவரைக் கொல்ல விளைந்தனர், அவர்கள் அவரைப் படுகொலை செய்ய சதிசெய்தனர்.

பின்னர் அல்லாஹ் அவர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றினான், அவர் தனது ஊரான அல் உயய்னாவுக்குத் திரும்பினார், மேலும் இந்த விவகாரத்தில் அவருக்கு உதவவும், ஒத்துழைக்கவும் அதன் தலைவரை அழைத்தார். தலைவரான அவர் அழைப்புக்கு பதிலளித்தார், அவர் அவருக்கு உதவினார், மேலும் அவர் அவருக்கு ஆதரவாளராக மாறினார்.

பின்னர் ஷெய்க் -ரஹிமஹுல்லாஹ்- தனது தாஃவாவை அறிவித்தார், மேலும் அவர் அப்போது மக்கள் மத்தியில் காணப்பட்ட ஷிர்க்கை ஏற்கவில்லை. அவர் ஸைத் இப்னு அல் கத்தாப் (ரழி) அவர்களின் கப்ருக்கு (மண்ணறைக்கு) மேல் கட்டப்பட்டிருந்த கல்லறையை அழித்தார். அல் யமாமா போர் நடந்த இடமான அல் உயய்னாவில் அவரது கப்ர் அமைந்துள்ளது. இந்தப் போர் முஸ்லீம்களுக்கும், பொய்யன் முஸைலிமாவுக்கும் அவனைப் பின்பற்றிய முர்த்தத்களுக்கும் (முஸ்லிமாக இருந்து பின்னர் நிராகரிப்பாளர்களாக மாறியவர்கள்) இடையே நடந்தது. அவர் (ஸைத் இப்னு அல் கத்தாப் - அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக) உயிர்த்தியாகத்தை அடைந்து இந்த இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அதன்பின் இணைவைப்பாளர்கள் (முஷ்ரிக்குகள்) அவர்களது வழக்கப் படி அவருடைய கப்ருக்கு மேல் கட்டிட அமைப்பில் ஒன்றைக் கட்டினார்கள், அவர்கள் அவருடைய கப்ரை சுற்றி தவாஃப் செய்தனர். அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதற்கும் பதிலாக அடக்கம் செய்யப்பட்டவரிடம் மன்றாடிப் பிரார்த்திக்கத் தொடங்கினர். இவ்வாறான நிலையில்தான் ஷெய்க் தனக்கு உதவியாக இருக்கும் ஒருவரைக் கண்டடைந்தார் - அந்த நபர் தலைவராக இருந்தார் - அவர் இந்த ஷிர்க்கான வழிபாட்டை அழித்தார்.

பின்னர் அவர் தகுதியானவர்கள் மீது இஸ்லாமிய தண்டனையை நிலைநாட்டத் தொடங்கினார். விபச்சாரத்தில் ஈடுபட்ட ஒரு பெண் அவரிடம் வந்து, இந்த விபச்சாரக் குற்றத்தை அவரிடம் ஒப்புக்கொண்டு, தன் மீது கல்லெறியும் இஸ்லாமிய தண்டனையை நிலைநாட்டும்படி வேண்டினாள். எனவே அவர் அல்லாஹ்வின் தூதரின் (ஸல்) முன்மாதிரியைப் பின்பற்றி அவளைக் கல்லெறிந்தார். என்ன நடந்தது என்ற செய்தி அல் அஹ்ஸாவின் தலைவருக்கு எட்டியது, அப்போது அவருக்கு நஜ்தின் தலைவர் மீது செல்வாக்கு இருந்தது. மேலும் அவர் அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கியும், செல்வத்தைக் கொண்டும் உதவி வருபவராக இருந்தார்.

இந்த தகவல் அவருக்கு எட்டியபோது அவர் அல்-உயய்னாவின் தலைவரிடம் கூறினார்: "ஒன்று நீங்கள் இந்த மார்க்கவாதியை வெளியேற்றுங்கள் அல்லது நான் உங்களுக்கு செல்வத்தை வழங்குவதை நிறுத்திவிடுவேன்." தலைவரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாமல், அல் அஹ்ஸாவின் தலைவர் தெரிவித்திருக்கும் விஷயத்தை ஷெய்க்கிடம் முன்வைத்தார். ஷெய்க் அவரை சமாதானப்படுத்தினார், மேலும் அவரது பயத்தை அமைதிப்படுத்தினார்.

அந்த ஏற்பாடு உயர்ந்தவனான அல்லாஹ்வின் கையில் உள்ளது என்று அவருக்குத் தெரிவித்தார். யார் இந்த விவகாரத்தை நிலைநாட்டுகிறாரோ, நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு உதவி செய்து அவர் இழந்ததை விட அதிகமான செல்வத்தை வழங்குவான். ஆனால் அந்த மனிதனின் பலவீனம் காரணமாக அவர் தனது நிலைப்பாட்டில் நிற்கவில்லை, மாறாக அல்-அஹ்ஸாவின் தலைவரின் அச்சுறுத்தலுக்கு அவர் அடிபணிந்தார், இதன் விளைவாக அல் அஹ்ஸாவின் அடக்குமுறை ஆட்சியாளரின் உத்தரவின் பேரில் உயய்னாவை விட்டு வெளியேறுமாறு ஷெய்க்கிற்கு உத்தரவிட்டார்.

இவ்வாறு, நடுப்பகல் வெயில் பொழுதில் ஷெய்க் வெளியேறினார். கால் நடையாக நடந்தே சென்றார். அப்போது அவரிடம் கை விசிறியைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. கை விசிறியான அதனை கடுமையான வெப்பத்தைத் தணிப்பதற்காக முகத்தில் விசிறுவதற்காகவும், தலைக்கு நிழலைக் கொடுப்பதற்காகவும் பயன்படுத்தி வந்தார்.

பின்னர் அவர் -ரஹிமஹுல்லாஹ்- திரியாவுக்கு நடந்தே சென்றார்.

அவர் தனது மாணவர் ஷெய்க் இப்னு சுவைலிமிடம் சென்றார், மேலும் அவர் அவரது மூத்த மாணவர்களிலிருந்து உள்ளவராவார். அந்த மாணவர் மனமுடைந்து, ஷெய்க் தாக்கப்பட்டு விடுவாரோ என்று பயந்தார். ஆனால் திரியாத் தலைவரின் மனைவியைப் பொறுத்தவரை, ஈமானும் தவ்ஹீதும் அவளது இதயத்தில் நுழைந்திருந்தன, மேலும் அவள் இந்த ஷெய்க்கை நேசித்தாள். எனவே அவள் தனது கணவர் முஹம்மது பின் ஸஊத்திடம் இந்த விவகாரத்தை முன்வைத்தாள். அவர் அவருக்கு உதவுவார், அவருடன் நிற்பார் என்று அவள் நம்பினாள். அவ்வாறு செய்வதன் மூலம் அல்லாஹ் அவரது செயல்களுக்கான நன்மைகளைக் கொள்ளையாக அவருக்கு வழங்குவான். எனவே அவர் இந்த இமாம், இந்த அழைப்பாளருக்கு உதவ விரைந்து செல்ல வேண்டும் என்று அவள் விரும்பினாள்.

எனவே இதைச் செய்யும்படி அவள் கணவரிடம் கோரிக்கை வைத்தபோது அவர் கூறினார்: "ஷெய்க்கை என்னிடம் அழைத்து வாருங்கள்." அவள் கூறினாள்: “இல்லை, அவரை உங்களிடம் வர வேண்டும் என்று நீங்கள் வேண்டிக் கொண்டால், அவரைத் துன்புறுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்கிறீர்கள் என்று மக்கள் சொல்வார்கள். மாறாக நீங்கள் அவரிடம் செல்லுங்கள்.” எனவே தலைவர் ஷெய்க் இருந்த இப்னு சுவைலிமின் வீட்டிற்குச் சென்றார். வந்தவுடன் அவர் அச்சத்தில் இருந்த இப்னு சுவைலிமைக் கண்டார், சுவைலிம் தனக்காக அஞ்சவில்லை, ஆனால் ஷெய்க்கிற்காக மட்டுமே அஞ்சிக் கொண்டிருந்தார். உள்ளே நுழைந்த

அவர், ஷெய்க்கிற்கு ஸலாம் கூறிவிட்டு, இந்த விவகாரம் குறித்தும், அவர் என்ன செய்ய விரும்புகிறார் என்றும் விசாரித்தார். ஷெய்க் அதை தலைவரிடம் விளக்கி கூறினார்: ''இது தவ்ஹீதின் அழைப்பு மற்றும் இறைத்தூதர்களின் அழைப்பு ஆகும். யார் அதை நிலைநாட்டுகிறாரோ, நிச்சயமாக உயர்ந்தவனான அல்லாஹ் அவருக்கு உதவி செய்வான், துணை நிற்பான், பலம் கொடுப்பான்''. இந்த நல்ல பேச்சு தலைவரின் இதயத்தில் நுழைந்தது, அவர் உறுதியாக இருந்தார், மேலும் அவர் அவருக்கு உதவுவதாக ஷெய்க்கிடம் உறுதியளித்தார். ஷெய்க்கும் அவருக்கு உறுதிமொழியைக் கொடுத்தார், இது ஷெய்க்கிற்கும் தலைவருக்கும் இடையிலான உறுதிமொழியை நிறைவு செய்தது.

தொடக்கத்தில் தாஃவாவை வெளிப்படையாகச் செய்து திரியா நிலத்தில் பரப்பினார்கள், பின்னர் பிற நிலங்களுக்கும் பரப்பினார்கள். இந்த நேரத்தில், ஷெய்க்கின் மீது கடும் சினமுற்றவர்களிடமிருந்து கோபமும் ஆத்திரமும் தீவிரமடைந்தது, மேலும் அவர்கள் தங்கள் அனைத்துப் படைகளையும் அவருக்கு எதிராகக் கொண்டு வந்தனர். ஆனால் அவர் உறுதியாகவும் தீர்மானமாகவும் இருந்தார் அத்துடன் அவர் மாணவர்களுக்கும் கற்பிக்கத் தொடங்கினார். மேலும் அவர் ஆதாரங்களின் அடிப்படையில் கட்டுரைகள் மற்றும் புத்தகங்களையும் எழுதி வெளியே அனுப்பினார். தலைவர்களுக்கு அல்லாஹ்வின் பாதைக்கு அழைப்பு விடுத்து கடிதம் எழுதினார். அவரிடம் முன்வைக்கப்பட்ட விஷயங்கள் குறித்து இஸ்லாமிய தீர்ப்புகளை வழங்கினார். அவர் கடமையான தொழுகைகளில் மக்களை வழிநடத்தினார், ஜும்ஆ மற்றும் ஈத் பிரசங்கத்தை வழங்கினார்; இதனால் அவர் முஸ்லீம்களுக்கு ஒரு முக்கியத்துவம் மிக்கவராக ஆனார். ஷெய்க்கின் விவகாரம் பரவலாகி வருவதை எதிரிகள் உணர்ந்தபோது அவருக்கு எதிராகத் தங்கள் சதிகளை வெளிப்படுத்தினார்கள். மேலும் அல்லாஹ்வின் ஒளியை தங்கள் வாயால் அணைக்க விரும்பினார்கள்.

يُرِيْدُوْنَ اَنْ يُّطْفِــُــوْا نُوْرَ اللّٰهِ بِاَ فْوَاهِهِمْ وَيَاْبَى اللّٰهُ اِلَّآ اَنْ يُّتِمَّ نُوْرَهٗ وَلَوْ كَرِهَ الْـكٰفِرُوْنَ

அவர்கள் தங்கள் வாய்களினால் (ஊதி) அல்லாஹ்வின் பிரகாசத்தை அணைத்துவிட நாடுகின்றனர்; இந்நிராகரிப்போர் வெறுத்தபோதிலும், அல்லாஹ் தன்னுடைய பிரகாசத்தை பூர்த்தியாக்கி வைப்பதைத் தவிர (வேறெதையும்) நாடவில்லை.
(அல்குர்ஆன்: 9:32)

அப்போது ஷெய்க் ஜிஹாத் செய்ய உத்தரவிட்டார். எனவே அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு இடையூறு விளைவிப்பவர்களையும், சத்தியத்தை ஏற்க மறுத்து ஷிர்க் மற்றும் பொய்யின் மீது பிடிவாதமாக நிலைத்திருப்பவர்களையும் எதிர்த்துப் போரிட இராணுவத்தைத் தயார் செய்தார். ஜிஹாதின் கொடி உயர்த்தப்பட்டது. நன்மையைக் கட்டளையிடுவதையும் தீமையைத் தடுப்பதையும் அவர் நிலைநாட்டினார்.

கோத்திர ரீதியான சட்டங்கள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு பதிலாக இஸ்லாமிய சட்டத்தின் மூலம் ஆட்சியை நிலைநாட்டினார். இவ்வாறாக தூய சட்டம் இந்த மண்ணை ஆட்சி செய்தது. மேலும் தாஃவாவின் ஒளி திரியாவுக்கு வெளியே உள்ள நிலங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. மேலும் அவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாதை நிறுவினார். எனவே அல்லாஹ்வின் பாதையைத் தடுத்து, சத்தியத்தை ஏற்க மறுத்தவர்களுக்கு எதிராக ஜிஹாதை முன்னெடுத்தார்கள். அல்லாஹ்வை நம்பி, தாஃவாவை ஏற்றுக்கொண்டு, அதன் பாதையைத் தடுக்காதவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்கள் வலிமையையும் பதவியையும் தக்க வைத்துக் கொண்டனர், மேலும் அல்லாஹ் அவர்களை வலிமையிலும் நிலையிலும் உயர்த்தினான். ஆனால் அல்லாஹ்வின் மார்க்கத்தைத் தடுத்தவர்களைப் பொறுத்தவரை; அவர்களுக்கு எதிராக சத்தியத்தை உடைய மக்களுக்கு அல்லாஹ் உதவி செய்தான்.

இதனால் தாஃவா பரவி, ஸவூத் குடும்பத்தின் ஆட்சி சுற்றுப்புற நிலங்களிலும் பரவியது. ஒவ்வொரு தலைவரும் அவரவர் சொந்த கிராமத்தைக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அனைத்து

ஆட்சியாளர்களும் நஜ்தின் ஆட்சியின் கீழ் வந்தனர். அதற்கும் மேலாக, ஸவூத் குடும்பத்தின் ஆட்சி, மற்றும் இஸ்லாமிய சட்டம் மற்றும் தவ்ஹீத் ஆகியவை அரேபிய தீபகற்பத்திற்கும் அப்பால் யேமன் மற்றும் ஷாம் வரை பரவியது. ஸவூத் குடும்பத்தின் சகாப்தத்தில் அரேபிய தீபகற்பத்தின் பெரும்பகுதியை அவர்களின் ஆட்சி உள்வாங்கியது. தவ்ஹீத் பரவியது, அகீதா முதன்மையானதாக மாறியது, மக்கள் ஒளியால் பயனடைந்தனர். மேலும் அவர்களிடம் இருந்து தவறான நம்பிக்கைகள் அகற்றப்பட்டன. அறிவு, பதவி என்ற போர்வையில் அவர்களுக்கு இடையூறு விளைவித்து, பொது மக்களின் செல்வத்தை அபகரித்துக் கொண்டிருந்த அடக்குமுறை மக்களிடமிருந்து அல்லாஹ் அவர்களை விடுவித்தான். மக்களை வழிகெடுத்து அவர்களின் செல்வத்தை பொய்யால் நுகருபவர்கள் மற்றும் அடக்குமுறையாக தலைமைப் பதவிகளை எடுப்பவர்கள், இவை அனைத்தும் முடிவடைந்தது, எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன.

ஷெய்க் அதன் மூலம் மிக உயர்ந்தவான அல்லாஹ்விடமிருந்து நற்கூலியை மட்டுமே விரும்பினார். அவர் மக்களிடமிருந்து புகழையோ, மக்கள் மீது ஆட்சியையோ விரும்பவில்லை. மேலும் அவர் செல்வத்தை சேகரிக்க விரும்பவில்லை, மாறாக அவர் தர்மம் செய்தார், அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தார். மேலும் கடனை அடைத்தார். தன்னால் செலவழிக்க இயன்றதை மாணவர்களுக்காகவும், தன்னிடம் அறிவு பெற வந்தவர்களுக்காகவும் செலவு செய்தார்.

அவர் -ரஹிமஹுல்லாஹ்- செல்வம் இல்லாமல் ஏழையாக இருந்த நிலையிலேயே இறந்தார்.

ஆனால் அவரிடம் (அல்லாஹ்விடமிருந்தான) வெகுமதியும் இழப்பீடும் இருக்கிறது (இன் ஷா அல்லாஹ்).

அவர் அறிவையும் தாஃவாவையும் பரப்பினார், மேலும் அவர் அல்லாஹ்வின் மார்க்கத்தை வெளிப்படையானதாக ஆக்கினார். உயர்ந்தோனான அல்லாஹ் கூறியது போல்:

هُوَ الَّذِىْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَـقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖۙ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ

அவன் எத்தகையவனென்றால், தன்னுடைய தூதரை நேர்வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக்கொண்டும் அனுப்பி வைத்தான், இணை வைத்துக்கொண்டிருப்போர் (அதனை) வெறுத்தபோதிலும், (உலகிலுள்ள) எல்லா மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்யவே (அவ்வாறு செய்தான்.)
(அல்குர்ஆன்: 9:33)

இது ஷெய்க்கின் தாஃவாவின் சாராம்சம் ஆகும். நாம் குறிப்பிட்டுள்ளவற்றைப் பற்றிப் பேசுகின்ற அவரது புத்தகங்கள் மற்றும் கட்டுரைகள் இவை ஆகும். அவரது புத்தகங்களும் ஆய்வுக் கட்டுரைகளும் அவரது சான்றுகளையும் ஆதாரங்களையும், மேலும் அவர் கொண்டிருந்த பரந்த அறிவையும், அத்துடன் சந்தேகங்களை எவ்வாறு நீக்கினார் என்பதையும் ஆவணப்படுத்துகின்றன. கிதாபுத் தவ்ஹீதில் நீங்கள் படித்ததே இதற்கு உதாரணம் ஆகும்.

குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள் மற்றும் அறிஞர்களின் கூற்றுகள் ஆகியவற்றைக் குறிப்பிடுவதில் சிறந்த விளக்கங்கள் அவரிடம் உள்ளன. இதை அவருடைய ‘சந்தேகங்களை நீக்குதல்’ என்ற புத்தகத்தில் காணலாம். சந்தேகங்களை உடைய மக்களால் அவரது தாஃவாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சந்தேகங்கள் இவை. எனவே அவர் அவர்களுக்கு பதிலளித்து இந்த நூலில் அவற்றை நீக்கி ரத்து செய்தார். அவர் இதை சந்தேகம் உள்ளவர்களுக்கு ஒரு உறுதியான மறுப்பாக முன்வைத்தார். (இன்ஷா அல்லாஹ் இந்நூலானது எமது இஸ்லாமியபுரம் இணையத்தளத்தினால் எதிர்காலத்தில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்படும்). மேலும் ஷெய்க்கின் அத்-துரார் அஸ்-சன்னியா மற்றும் அதைத் தவிர மற்ற எழுத்துக்களில் நீங்கள் காணக்கூடிய பல

ஆய்வுகளில் அவர்களின் சந்தேகங்களின் பொய்மையை அவர் தெளிவுபடுத்தினார். இது ஆவணப்படுத்தப்பட்டு மேலும் பாதுகாக்கப்பட்டு உள்ளது. அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அல்லாஹ் கூறியது போல் சத்தியம் நிலைத்திருக்கிறது.

وَاَمَّا مَا يَنْفَعُ النَّاسَ فَيَمْكُثُ ؕ

மனிதர்களுக்குப் பலன் அளிக்கக்கூடியதோ பூமியில் தங்கி விடுகிறது'' (அல்குர்ஆன்: 13:17)

அவரது புத்தகங்கள் மற்றும் அவரது மாணவர்களின் புத்தகங்கள் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களின் புத்தகங்கள் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. இதற்கு நேர்மாறாக, சந்தேகிப்பவர்களின் சந்தேகங்கள் மறைந்துவிட்டன, அவர்களின் புத்தகங்கள் தொலைந்துவிட்டன, மேலும் அவர்களுடைய எந்த தடயமும் இல்லை. அவர்களிடமிருந்து எஞ்சியிருப்பதோ தெளிவற்றது மேலும் பொய்யான மக்களிடம் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சத்தியத்தைப் பொறுத்தவரை, அது தெளிவாக இருக்கிறது. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது.

ஷெய்க்கின் எதிரிகள் அவரை சந்தேகத்துடன் எதிர்த்தனர், இது விசித்திரமானதல்ல. ஏனெனில் இறைத்தூதர்கள் (அல்லாஹ் அவர்கள் அனைவர் மீதும் அருள் புரிவானாக) எதிர்ப்பைப் பெற்றனர், உயர்ந்தோன் அல்லாஹ் கூறியது போல்:

وَكَذٰلِكَ جَعَلْنَا لِكُلِّ نَبِىٍّ عَدُوًّا شَيٰطِيْنَ الْاِنْسِ وَالْجِنِّ يُوْحِىْ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا ‌ؕ وَلَوْ شَآءَ رَبُّكَ مَا فَعَلُوْهُ فَذَرْهُمْ وَمَا يَفْتَرُوْنَ

மேலும், இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும், ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம், அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான (பொய்க்) கூற்றுக்களை ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர், மேலும், உம்முடைய

இரட்சகன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள், ஆகவே, (நபியே!) நீர் அவர்களையும் அவர்கள் கற்பனை செய்து கொண்டிருப்பவைகளையும் விட்டுவிடுவீராக!
(அல்குர்ஆன்: 6:112)

அவர்கள் சாதாரண பேச்சைப் பயன்படுத்துவதில்லை, மாறாக எளிய மனப்பான்மை கொண்டவர்களையும், அறிவில் உறுதியாக இல்லாதவர்களையும் கவர்ந்திழுக்கும் வகையில் அலங்காரப் பேச்சைப் பயன்படுத்துகிறார்கள், அதன் விளைவாக அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இது அலங்கரிக்கப்பட்ட பேச்சாக இருக்கிறது, இது பொன்னிறமானது, பளபளப்பை உடுத்திக்கொண்டது, ஆனால் அது பொய்யானதாக இருக்கிறது. மற்றும் அசத்தியமானது; அதை எப்படி அலங்கரித்தாலும், ஆடை அணிவித்தாலும் அது பொய்யாகவே எஞ்சியிருக்கும். பொய்யால் பலன் இல்லை.

يُوْحِىْ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا ؕ

அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான (பொய்க்) கூற்றுக்களை ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர்,
(அல்குர்ஆன்: 6:112)

மக்களைச் சோதித்து பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே இந்த மாயை உள்ளது. இதுவே ஷெய்க் ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கும் ஏற்பட்டது, மேலும் அவருக்கு முன் வந்த தூதர்கள் மற்றும் அவருக்கு முன் வந்த அந்த இமாம்கள் மற்றும் நல்ல மனிதர்களிடமிருந்து பின்பற்ற வேண்டிய நல்ல முன்மாதிரிகளை அவர் பெற்றிருந்தார். இமாம் அஹ்மதைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்? நான்கு இமாம்களைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்? அல்லாஹ்வின் தூதருக்குப் (ஸல்) பிறகு அவரது தோழர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றியவர்களைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்? ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா மற்றும் இப்னு அல் கய்யீம் மற்றும் பிற இமாம்களைப் பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள்?! இது ஷெய்க்

முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களுக்குத் தனிப்பட்டதல்ல, மாறாக இதுவே படைப்பில் அல்லாஹ்வின் சுன்னாவாகும். அவன் தனது அடிமைகளை பரீட்சித்து சோதிக்கிறான்; வழிகேட்டின் பக்கம் அழைப்பவர்களைப் போன்றவர்களைக் கொண்டு அவர்களைச் சோதனை செய்கிறான். மேலும் சத்தியத்தின் பக்கம் அழைப்பவர்கள் மட்டுமே இருந்திருந்தால், மக்கள் இந்த தடையைக் கடந்து எதை அடைந்து கொள்ள வேண்டுமோ அதை அடைந்து கொள்ள முடியாது. எனவேதான் அல்லாஹ் கூறியது போல் வழிகேட்டின் பால் அழைப்பவர்களும் காணப்படுகிறார்கள்.

وَجَعَلْنٰهُمْ اَىِٕمَّةً يَّدْعُوْنَ اِلَى النَّارِ‌ۚ

மேலும், நரகத்தின் பக்கம் அழைக்கக்கூடிய தலைவர்களாகவே (இம்மையில்) நாம் அவர்களை ஆக்கிவைத்திருந்தோம்.
(அல்குர்ஆன்: 28:41)

மேலும் உயர்ந்தவன் கூறினான்:

اُولٰٓٮِٕكَ يَدْعُوْنَ اِلَى النَّارِ ۖۚ وَاللّٰهُ يَدْعُوْٓا اِلَى الْجَـنَّةِ وَالْمَغْفِرَةِ بِاِذْنِهٖ‌ۚ

அவர்கள் நரகத்திற்கு அழைக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வோ தன் உத்தரவு கொண்டு சொர்க்கத்தின்பாலும் (தன்னுடைய) மன்னிப்பின் பாலும் (உங்களை) அழைக்கின்றான்.
(அல்குர்ஆன்: 2:221)

மேலும் அவன் ஷைத்தானைப் பற்றி கூறினான்:

اِنَّ الشَّيْطٰنَ لَـكُمْ عَدُوٌّ فَاتَّخِذُوْهُ عَدُوًّا ‌ؕ اِنَّمَا يَدْعُوْا حِزْبَهٗ لِيَكُوْنُوْا مِنْ اَصْحٰبِ السَّعِيْرِؕ

நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு விரோதியாக இருக்கின்றான், ஆகவே, அவனை நீங்களும் விரோதியாகவே எடுத்துக் கொள்ளுங்கள், அவன் (தனக்கு வழிபட்ட) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் நரகவாசிகளில் ஆகிவிடுவதற்காகவேதான்.
(அல்குர்ஆன்: 35:6)

ஷைத்தானும் அவனுடைய உதவியாளர்களும் மக்களை நெருப்பிற்கு அழைக்கிறார்கள். அவர்கள்: “வாருங்கள் நெருப்புக்குப் போவோம்” என்று அவர்களிடம் சொல்லவில்லை. அவர்கள் சொல்கிறார்கள்: "சத்தியத்திற்கு செல்வோம் வாருங்கள், எங்களிடம் சத்தியம் உள்ளது, எங்களிடம் அறிவும் ஆதாரங்களும் உள்ளன." அவர்கள் மக்களுக்கான விடயங்களை பொய்யாக்குகிறார்கள், இதனால் எளியவர்களும் அறிவற்றவர்களும் இந்த விவகாரங்களால் ஏமாற்றப்படுகிறார்கள். அவர்கள் அதை உண்மை என்று நம்புகிறார்கள், உண்மையில் இது ஒரு மாயக்கதையாக இருக்கிறது.

وَالَّذِيْنَ كَفَرُوْۤا اَعْمَالُهُمْ كَسَرَابٍۭ بِقِيْعَةٍ يَّحْسَبُهُ الظَّمْاٰنُ مَآءً ؕ حَتّٰۤى اِذَا جَآءَهٗ لَمْ يَجِدْهُ شَيْـًٔـــا

இன்னும் நிராகரித்துவிட்டார்களே அவர்கள் - அவர்களின் செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல் (நீரைப்) போலாகும்; தாகித்தவன் அதைத் தண்ணீர் என எண்ணிக் கொள்கிறான், எதுவரையெனில் (முடிவாக) அவன் அதனிடத்தில் வந்தடைந்தால் அதை அவன் ஒரு பொருளாகப் பெற்றுக் கொள்ள மாட்டான்,
(அல்குர்ஆன்: 24:39)

நபி (ஸல்) அவர்கள் நமக்கு அறிவித்தார்கள்:

“அங்கே நரகத்தின் வாயில்களில் அழைப்பவர்கள் இருப்பார்கள்; யார் அவர்களுக்குப் பதிலளித்தாலும், அவர்களை அவர்கள் அதில் தூக்கி எறிவார்கள். நான் கூறினேன்: "அல்லாஹ்வின் தூதரே (ஸல்), அவற்றை எங்களுக்கு விவரியுங்கள்." அவர் (ஸல்) கூறினார்: "அவர்கள் நம் மக்களில் இருந்து உள்ளவர்களாக இருப்பார்கள், நம்முடைய மொழியைப் பேசுவார்கள்" (சுனன் இப்னு மாஜா 3979)

இது ஃபித்னாவின் விரிவான தன்மையிலிருந்து உள்ளதாகும், அவர்கள் நம்மிடையே இருந்து, நம் குழந்தைகளிடமிருந்து, நம் நாட்டிலிருந்து, நம் மொழியைப் பேசுவார்களாக இருப்பார்கள். அவர்கள் நெருப்பை

நோக்கி அழைப்பார்கள், வழிகேட்டை நோக்கி அழைப்பார்கள். இது சாட்சி சொல்லப்படக் கூடிய ஒன்றாக இருந்த வண்ணம் உள்ளது, இதை நீங்கள் இப்போது கேள்விப்படுகிறீர்கள். இப்போது ஊடகங்களிலும் செயற்கைக்கோள் தொலைக்காட்சியிலும் அந்த அழைப்பாளர்கள் தவறாக வழிநடத்துவதை நீங்கள் கேட்கிறீர்கள். வழிகேட்டை நோக்கி அழைப்பவர்கள் தவ்ஹீத் என்ற போர்வையில் கப்ர் வணக்கத்தைப் பரப்புவதையும், வழிகேட்டைப் பரப்புவதையும், ஷிர்க்கைப் பரப்புவதையும் நீங்கள் காணலாம். “இது ஷிர்க்” என்று அவர்கள் கூறுவதில்லை. அவர்கள் கூறுகிறார்கள்: “இது தவ்ஹீத். இதுதான் மார்க்கம். இதுவே சுன்னா”. மக்களை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறு கூறுகின்றனர்.

يُوْحِىْ بَعْضُهُمْ اِلٰى بَعْضٍ زُخْرُفَ الْقَوْلِ غُرُوْرًا

அவர்களில் சிலர் சிலருக்கு அலங்காரமான (பொய்க்) கூற்றுக்களை ஏமாற்றுவதற்காக இரகசியமாக அறிவிக்கின்றனர், மேலும், உம்முடைய இரட்சகன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள், (அல்குர்ஆன்: 6:112)

முதலாவது சந்தேகம்

முதல் சந்தேகம்: ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களின் தாஃவாவுக்கு எதிராக அவர்கள் முன்வைக்கும் முதலாவது சந்தேகமாக ‘அவர் ஐந்தாவது மத்ஹபைக் கொண்டு வந்தார்’ என்று கூறுகிறார்கள். அஹ்லுஸ் ஸுன்னாவின் நான்கு மத்ஹபுகள் உங்களுக்குத் தெரியும்: ஹனஃபி மத்ஹப், மாலிகி மத்ஹப், ஷாஃபி மத்ஹப் மற்றும் ஹன்பலி மத்ஹப். இந்த நான்கு மத்ஹபுகளுக்கு வெளியே முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் ஐந்தாவது மத்ஹபைக் கொண்டு வந்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள், அதை அவர்கள் வஹாபி மத்ஹப் என்றும் அழைக்கிறார்கள். இதற்கான பதில் எளிது. ஷெய்க் -ரஹிமஹுல்லாஹ்- அவர்கள் சுயாதீனமான ஓர் மத்ஹபைக் கொண்டு வரவில்லை என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். மாறாக ஃபிக்ஹ் விவகாரங்களில் அவர் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலின் மத்ஹபைப் பின்பற்றினார்.

மேலும் அவருக்கு ஆதாரப்பூர்வமான ஒரு அறிவிப்பு கிடைக்கப் பெற்று அது இன்னும் சரியானதாக இருந்தால், அது ஹன்பலி மத்ஹபில் உள்ளதாக இல்லாவிட்டாலும் கூட, அவர் அதைப் பின்பற்றுவார். இதன் பொருள் அவர் ஒரு தனிநபருக்கு சார்பாக நடந்தார் என்பதல்ல, மாறாக அவர் சத்தியத்தின் பக்கம் சென்றார். எனவே அவர் ஹன்பலி, ஆனால் ஆதாரம் இமாம் அஹ்மதைத் தவிர மற்றவர்களிடமும், ஹன்பலி மத்ஹபைத் தவிர மற்றவற்றிலும் இருந்தால் அவர் அதைப் பின்பற்றுவார். இதைத்தான் இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் ஏவுகிறார். அவர் ஆதாரங்களைப் பின்பற்றுமாறும், அவருடைய கூற்றுகளையோ அல்லது மற்றவர்களின் கூற்றுகளையோ நாம் எடுத்துக் கொள்ள கூடாது என்றும் (மக்களுக்கு) கட்டளையிட்டார். இமாம் அஹ்மத் (ரஹி) கூறினார்:

"சிலர் அறிவிப்பாளர் தொடரை அறிந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது, மேலும் அதுதான் சத்தியம் என்றும் (அவர்களுக்குத்)

தெரியும், ஆனால் அவர்கள் அதை விட்டுவிட்டு சுஃப்யான் மற்றும் அவரைத் தவிர மற்றவர்களின் அபிப்பிராயங்களுக்குச் செல்கிறார்கள்."

சுஃப்யான் என்றால் யார்? அவர்தான் சுஃப்யான் அத் தவ்ரி—ரஹிமஹுல்லாஹ்—கண்ணியமிக்க இமாம். அவர் கூறினார்: "அவர்கள் சுஃப்யானின் அபிப்பிராயத்துக்குச் செல்கிறார்கள்."

இதன் பொருள்: அவர்கள் ஆதாரத்தை விட்டுவிட்டு ஒரு அறிஞரின் அபிப்பிராயத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்பதாகும். உயர்ந்தவனான அல்லாஹ் கூறும்போது:

فَلْيَحْذَرِ الَّذِيْنَ يُخَالِفُوْنَ عَنْ اَمْرِهٖۤ اَنْ تُصِيْبَهُمْ فِتْنَةٌ اَوْ يُصِيْبَهُمْ عَذَابٌ اَ لِيْمٌ ۚ,

ஆகவே, (நம் தூதராகிய) அவருடைய கட்டளைக்கு மாறு செய்கிறார்களே, அத்தகையவர்கள், (உலகில்) தங்களுக்கு யாதொரு துன்பம் பிடித்துவிடுவதையோ, அல்லது துன்புறுத்தும் வேதனை பிடித்து விடுவதையோ பயந்து கொண்டிருக்கவும்.
(அல்குர்ஆன்: 24:63)

ஃபித்னா என்றால் என்ன தெரியுமா? ஃபித்னா என்பது ஷிர்க் ஆகும். ஒருவேளை ஒருவர் இறைத்தூதரின் (ஸல்) சில கூற்றுகளை நிராகரித்தால், அவரது இதயத்தில் விலகல் விழுந்து, அதன் விளைவாக அவர் அழிக்கப்படுவார். இதுதான் இமாம் அஹ்மத் அவர்களின் கூற்றாக இருக்கிறது. இவ்வாறே ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அஹ்லுஸ் ஸுன்னாவின் இமாமான இமாம் அஹ்மத்தின் மத்ஹபில் இருந்தார். ஆனால் அவருக்கு அஹ்மத் மீது கண்மூடித்தனமான சார்பு இருக்கவில்லை. மாறாக, அவரைத் தவிர மற்றவர்களிடமிருந்து ஆதாரம் கிடைத்தபோது, அந்த ஆதாரத்தின் அடிப்படையிலான அறிவிப்புகளை அவர் எடுத்துக் கொண்டார். இது அவருடைய இஸ்லாமியத் தீர்ப்புகளிலும் அவரது ஆய்வுக் கட்டுரைகளிலும் உள்ளது. இது தற்போதும் அறியப்பட்டதாகவும் மேலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உள்ளது. மேலும் இது ஃபிக்ஹ்

விவகாரங்களைப் பற்றியது ஆகும். அகீதாவின் விஷயத்தைப் பொறுத்தவரை, அவர் நபித்தோழர்கள், தாபிஈன்கள், அவர்களைப் பின்பற்றியவர்கள் மற்றும் நான்கு இமாம்களை உள்ளடக்கிய பயபக்திமிக்க முன்னோர்களின் அகீதாவில் இருந்தார். அவர் ஃபிக்ஹிலோ அல்லது அகீதாவிலோ ஒரே ஒரு மத்ஹபை மட்டும் கடைப்பிடிக்கவில்லை. அவரது மத்ஹபில் அவர் ஹன்பலி ஆவார், மேலும் அவர் தனது அகீதாவில் ஸலபி ஆவார். அவருக்கு முன்னிருந்த இமாம்கள் சொன்னதைத்தான் அவர் சொன்னார். அவர் தனக்கு முன் இருந்த அறிஞர்களின் சான்றுகள் மற்றும் கூற்றுகளின் அடிப்படையில் மட்டுமே தீர்ப்புகளை வழங்கினார். இது இமாம்களின் வழிமுறையாகும், அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் கருணை காட்டுவானாக.

இமாம் இப்னு அப்துல் வஹ்ஹாப் சுயாதீனமான ஒரு மத்ஹபைக் கொண்டு வரவில்லை. அவர்கள் கூறும் இந்த சுயாதீனமான மத்ஹப் எங்கே இருக்கிறது? இமாம் அபூ ஹனீபாவின் மத்ஹப் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இமாம் மாலிக்கின் மத்ஹப் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இமாம் ஷாஃபியின் மத்ஹப் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இமாம் அஹ்மதின் மத்ஹப் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இப்னு அப்துல் வஹ்ஹாபின் மத்ஹப் எங்கே இருக்கிறது? அவருக்கு ஆவணப்படுத்தப்பட்ட மத்ஹப் என்று ஏதாவது உள்ளதா? ஒருபோதும் இல்லை! ஏனென்றால், அவர் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லாஹ்வின் மத்ஹபின் மீது இருந்தார், அது சட்டங்களுடன் தொடர்புடையது.

ஆனால் ஆதாரங்கள் மற்றும் சான்றுகளுடன் ஒரு விடயம் காணப்பட்டால், அப்போது அவர் ஆதாரங்களையும் சான்றுகளையும் யார் கைவசம் வைத்திருந்தார்களோ அவர்களிடமிருந்து அவற்றைப் பின்பற்றினார். ஆதாரம் இமாம் மாலிக், அல்லது அபூ ஹனீபா, அல்லது ஷாஃபி அல்லது அவர்களைத் தவிர வேறு யாரிடமாவது இருந்தாலும் ஒன்றுதான். ஆதாரம் சுஃப்யான் அத் தவ்ரி, அல்லது இப்னு அல் முபாரக்,

அல்லது அல் அவ்ஸாயி அல்லது இமாம்களிடமிருந்து அவர்களைத் தவிர வேறு யாரிடமாவது இருந்தாலும் ஒன்றுதான். அவர் ஆதாரத்தைப் பின்பற்றினார். இதுதான் உண்மையான அறிஞரின் நிலையாகும். எனவே இப்னு அப்துல் வஹ்ஹாப் புதிய மத்ஹபைக் கொண்டு வந்தார் என்ற அவர்களின் கூற்று பொய்யானது, அதே போல் வஹ்ஹாபி என்ற மத்ஹப் உள்ளது என்ற அவர்களின் கூற்றும் பொய்யானது.

நாங்கள் சொல்கிறோம்: "நீங்கள் பொய் சொன்னீர்கள். வஹாபி மத்ஹப் எங்கே?" வஹ்ஹாபி என்ற மத்ஹபு இல்லை; துணை விஷயங்களிலும் அது இல்லை அல்லது அகீதா விஷயங்களிலும் அது இல்லை. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், இமாம் இப்னு அப்துல் வஹ்ஹாபின் மத்ஹபை எங்களுக்குக் காட்டுங்கள், அதை எங்களுக்குக் காட்டுங்கள்! ஐந்தாவது மத்ஹபாக நான்கு மத்ஹபுகளுடன் அது எவ்வாறு அமர்ந்திருக்கிறது என்பதை எங்களுக்குக் காட்டுங்கள். இதனால் அவர்களின் பொய் வெளிப்படுகிறது. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது.

இவை ஷைகுல் இஸ்லாம் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாபின் புத்தகங்கள்; அவரது புத்தகங்கள் அவர் ஹன்பலி என்பதையும், அவர் ஆதாரங்களைப் பின்பற்றினார் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. மேலும் அவர் அகீதா, தவ்ஹீத் அர் ருபூபிய்யா, தவ்ஹீத் அல் உலூஹிய்யா, தவ்ஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத், அல்லாஹ், அவனுடைய மலக்குகள், அவனது வேதநூல்கள், அவனது தூதர்கள், இறுதி நாள் மற்றும் விதி அதன் நன்மை தீமை ஆகியவற்றில் ஸலஃப்களின் வழிமுறையின் மீது இருந்தார். அவர் இந்த விஷயங்களைப் பற்றிய புத்தகங்களை எழுதினார் அவை அவரது அகீதாவை ஆவணப்படுத்துகின்றன. இது மஜ்முஆ ரஸாயில் மற்றும் அத் துரார் அஸ் சன்னியா மற்றும் தனித்தனியாக அச்சிடப்பட்ட ஷெய்க்கினால் இயற்றப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகளில் உள்ளது. இந்தத் தொகுப்புகள் இப்போதும் உள்ளது. (கஸீம் மக்களைப் பற்றி ஷெய்க் எழுதிய சுருக்கமான கட்டுரை ஒன்று

அத்துரார் அஸ்ஸன்னியாவில் உள்ளது) இது இரண்டு பக்கங்களை மட்டுமே கொண்டுள்ளது, ஆனால் இது ஷெய்க்கின் அகீதாவையும் அவர் எதை நோக்கி அழைத்தார் என்பதையும் சுருக்கமாகக் கூறுகிறது.

இமாம் அப்துல் அஸீஸ் இப்னு முஹம்மத் இப்னு ஸஅத் காலத்தில் ஸஅத் குடும்பம் அல் ஹிஜாஸுக்குள் நுழைந்தபோது; ஷெய்க் அப்துல்லாஹ் இப்னு முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அப்போது அவர்கள் எதன் மீது இருந்தார்கள் என்பதை விளக்கி எழுதியிருக்கிறார். அது இப்போது அத் துரார் அஸ் சன்னியா தொகுப்பில் உள்ள ஒரு கட்டுரையில் உள்ளது. அகீதா, ஃபிக்ஹ் மற்றும் மார்க்கத் தீர்ப்புகளில் அவர்கள் எதன்மீது இருந்தார்கள் என்பதையும், இமாம்கள் அறிஞர்கள் தொடர்பாக அவர்கள் என்ன நிலைப்பாட்டில் இருந்தார்கள் என்பதையும் அதில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அவர்கள் அறிஞர்களை மதித்து அவர்களுக்கு மரியாதையளித்தார்கள், மேலும் ஆதாரங்களுடன் ஒத்துப்போனால் அவர்களின் கூற்றுகளைப் பின்பற்றினார்கள்.

அக்கட்டுரையை மறுபரிசீலனை செய்யுங்கள், ஐந்தாவது மத்ஹபை கொண்டுவந்தார் என்று அவர்கள் கூறுவது பொய் என்பதை நீங்கள் அறியலாம். ஷெய்க்கிற்கோ, அவரது மாணவர்களுக்கோ, அவரது பிள்ளைகளுக்கோ மற்றும் அவர்களைத் தவிர மற்றவர்களுக்கோ சுயாதீனமான மத்ஹப் என்று ஒன்று இருக்கவில்லை. மாறாக அகீதாவிலும் ஃபிக்ஹிலும் அவர்களின் மத்ஹப் இமாம்களின் மத்ஹப் ஆகவே இருந்தது.

இரண்டாவது சந்தேகம்

இரண்டாவது சந்தேகம்: முஸ்லிம்களை காஃபிர்கள் என்று ஷெய்க் அறிவித்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் கூறுகிறோம்: "ஷெய்க் காஃபிர்கள் என்று அறிவித்த அந்த முஸ்லிம்கள் யார்?" இதை எங்களுக்கு தெளிவுபடுத்துங்கள்!

கப்ரை வணங்குபவர்களைக் காஃபிர்கள் என்று ஷெய்க் அறிவித்தார் என்றால், அவர்கள் அல்லாஹ்வால் காஃபிர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தார்கள், மேலும் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களால் காஃபிர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தார்கள், மேலும் அவர்கள் முஸ்லீம்களின் ஒருமித்த கருத்துடன் காஃபிர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். அல்லாஹ் அல்லாதவர்களிடம் மன்றாடி பிரார்த்திப்பவர், அல்லது அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவர், அல்லது அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடுபவர்; இறந்தவர்களிடம் உதவி தேடுபவர், ஸியாரங்கள் மற்றும் கப்ருகளில் அடைக்கலம் தேடுபவர் மற்றும் அல்லாஹ்வின் தூதரின் (ஸல்) சுன்னாவை கைவிடுபவர்,

இவ்வாறான மக்களை காபிர்கள் மற்றும் வழிகெட்டவர்கள் என்று அறிவித்தது ஷெய்க் மட்டுமல்ல. அல்லாஹ் குர்ஆனில் அவர்களைக் காஃபிர்களாக அறிவித்தான், இறைத்தூதர் (ஸல்) தனது சுன்னாவில் அவர்களைக் காஃபிர்கள் என்று அறிவித்தார், மேலும் அறிஞர்கள் ஒருமித்த கருத்துடன் அவர்களைக் காஃபிர்களாக அறிவித்தார்கள். அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தனை செய்பவர், அல்லது அல்லாஹ் அல்லாதவர்களுக்கு அறுத்துப் பலியிடுபவர், அல்லது அல்லாஹ் அல்லாதவர்களின் மேல் சத்தியம் செய்பவர், அல்லது இறந்தவர்களிடம் உதவி தேடுபவர், அல்லது கப்ருகளைச் சுற்றி தவாப் செய்து அவர்களிடம் உதவி தேடுபவர்; இந்த நபர் ஷெய்க்கின் கூற்றின் படியும் மற்ற இமாம்களின் கூற்றுப்படியும் ஒரு முஷ்ரிக்

(இணைவைப்பாளர்) ஆவார். அவர்களை காஃபிர்கள் என்று அறிவித்தது ஷெய்க் மட்டும் அல்ல. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய நாயன் வேறு யாருமில்லை என்று உண்மையாகக் கூறி; அல்லாஹ்வுக்கு இணையாளர்களை ஆக்காமல் அவனை வணங்குகிற ஒரு முஸ்லிமைப் பார்த்து இவன் ஒரு காஃபிராவான் என்று ஷெய்க் அறிவிக்கவில்லை. அவர் முஸ்லிமைக் காஃபிராக அறிவிக்கவில்லை. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது.

எனவே அவர் முஸ்லீம்களை காஃபிர்கள் என்று அறிவித்தார் என்ற அவர்களின் கூற்று பொய்யானது ஆகும். நாம் கூறுகிறோம்: ஷெய்க் இணைவைப்பாளர்களைத்தான் காஃபிர்கள் என்று அறிவித்தார். மேலும் அவரது புத்தகங்கள் உள்ளன, அவரது மறுப்புகள் அறியப்படுகின்றன மற்றும் அவரது பேச்சு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அல்லாஹ் குர்ஆனில் யாரைக் காஃபிர்களாக அறிவித்தானோ அல்லது இறைத்தூதர் (ஸல்) தனது சுன்னாவில் யாரை காஃபிர்களாக அறிவித்தாரோ அல்லது ஒருமித்த கருத்துப்படி அறிஞர்கள் யாரைக் காஃபிர்களாக அறிவித்தார்களோ அவர்களைத் தவிர வேறு யாரையும் அவர் காஃபிராக அறிவிக்கவில்லை. மேலும், காஃபிர்களாக அறிவிக்கப்பட்டவர்களான அவர்கள் கப்ருகளை வணங்குபவர்களாக இருக்கிறார்கள், அல்லாஹ்வை வணங்குவதற்குப் பதிலாக கப்ருகளுக்கு மேல் சன்னதிகளைக் கட்டி வணங்குபவர்களாக இருக்கிறார்கள். இது அல் லாத், மற்றும் அல் உஸ்ஸா மற்றும் மூன்றாவதான மனாத் ஆகியவைகளை வணங்கி வந்தவர்களின் வழிபாடுகளுக்கு ஒப்பானதாகும். இவைகள் இஸ்லாத்திற்கு முந்தைய அறியாமை நாட்களில் வணங்கப்பட்டு வந்த சிலைகளாகும். மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறினான்:

وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ وَيَقُوْلُوْنَ هٰٓؤُلَاۤءِ شُفَعَاۤؤُنَا عِنْدَ اللّٰهِ ؕ قُلْ اَتُنَبِّـــُٔوْنَ اللّٰهَ بِمَا لَا يَعْلَمُ فِى السَّمٰوٰتِ وَلَا فِى الْاَرْضِ ؕ سُبْحٰنَهٗ وَتَعٰلٰى عَمَّا يُشْرِكُوْنَ

மேலும், அல்லாஹ்வையன்றி, தங்களுக்கு இடர் அளிக்காதவற்றை இன்னும், தங்களுக்குப் பலன் அளிக்காதவற்றை அவர்கள் வணங்குகிறார்கள், “இவர்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்கு

பரிந்துரையாளர்கள்'' என்றும் அவர்கள் கூறுகின்றனர், (ஆகவே, நபியே! நீர் அவர்களிடம்) ''வானங்களிலோ, பூமியிலோ அல்லாஹ்வுக்குத் தெரியாதவைகளை நீங்கள் அவனுக்கு அறிவிக்கின்றீர்களா? (அவனோ யாவையும் நன்கறிந்தவன்) அவன் மிகப் பரிசுத்தமானவன், அவர்கள் இணைவைப்பவைகளை விட்டும் உயர்வடைந்துவிட்டான்'' என்று கூறுவீராக!
(அல்குர்ஆன்: 10:18)

அல்லாஹ்; அவனுக்கு மட்டுமே அல்லாது மற்றவர்களுக்காக அவர்கள் செய்யும் வணக்கத்தை 'ஷிர்க்' என்று அழைத்தான், அவற்றைவிட்டும் தன்னைத் தூய்மையானவனாக அறிவித்துக் கொண்டான். அவர்கள் "இவர்கள் எங்கள் பரிந்துரையாளர்கள்" என்று கூறும்போதே அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டான். அதேபோல்தான் இன்றைய கப்ர் வணங்கிகளும். அவர்கள் கூறுகிறார்கள்: "நாங்கள் அவர்களிடம் பரிந்துரையை விரும்புகிறோம், எனவே அவர்கள் அல்லாஹ்விடம் எங்கள் சார்பாக பரிந்துரை செய்வார்கள். அதனால்தான் நாங்கள் அவர்களுக்கு அறுத்துப் பலியிடுகிறோம், அவர்களிடமிருந்து உதவியை நாடுகிறோம், அவர்களுக்கு எதுவும் சொந்தம் இல்லை என்று எங்களுக்குத் தெரியும், ஆனால் அவர்கள் எங்களுக்காக பரிந்து பேச வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்''. இதுவே முஷ்ரிகீன்களான பழையவர்களும் கூறிய கூற்று ஆகும். உயர்ந்தவனான அல்லாஹ் கூறினான்:

اَلَا لِلّٰهِ الدِّيْنُ الْخَالِصُ ؕ وَالَّذِيْنَ اتَّخَذُوْا مِنْ دُوْنِهٖۤ اَوْلِيَآءَ ۘ مَا نَعْبُدُهُمْ اِلَّا لِيُقَرِّبُوْنَاۤ اِلَى اللّٰهِ زُلْفٰى ؕ اِنَّ اللّٰهَ يَحْكُمُ بَيْنَهُمْ فِىْ مَا هُمْ فِيْهِ يَخْتَلِفُوْنَ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِىْ مَنْ هُوَ كٰذِبٌ كَفَّارٌ

தூய மார்க்கம் (வழிபாடு) அல்லாஹ்வுக்கே உரித்தானது என்பதை அறிந்துகொள்வீராக! இன்னும், அவனையன்றி (மற்றவர்களைப்) பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டிருக்கிறார்களே அத்தகையவர்கள், ''எங்களை அவர்கள் நெருக்கத்தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காகவேயன்றி அவர்களை நாங்கள் வணங்கவில்லை'' (என்று கூறுகின்றனர்), எதில் அவர்கள் வேறுபட்டுக்

கொண்டிருக்கிறார்களோ அது பற்றி, நிச்சயமாக அல்லாஹ் (மறுமையில்) அவர்களுக்கிடையில் தீர்ப்பளிப்பான், நிச்சயமாக அல்லாஹ் எவன் (உண்மையை) மிக்க மறுக்கிறவனாக, பொய்யனாக இருக்கிறானோ அவனை நேர் வழியில் செலுத்தமாட்டான்.
(அல்குர்ஆன்: 39:3)

அல்லாஹ் அவர்களைப் பொய்யர்கள் என்றும் நிராகரிப்பவர்கள் என்றும் அறிவித்தான். அவர்கள் கூறும்போது, "எங்களை அவர்கள் நெருக்கத்தால் அல்லாஹ்வுக்கு சமீபமாக்கி வைப்பார்கள் என்பதற்காகவேயன்றி அவர்களை நாங்கள் வணங்கவில்லை." என்று கூறுகிறார்கள். அவர்கள் அவர்களை வணங்குவதை தாங்களாகவே ஒப்புக்கொள்கிறார்கள். அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவன் ஒரு முஸ்லிமா?, இதை அவர்கள் வாக்குமூலமாக “நாங்கள் அவர்களை வணங்குகிறோம்” என்று கூறுகிறார்கள். எனவே அவர்கள் அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவதாக ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு அல்லாஹ் அல்லாதவர்களை யாராவது வணங்கினால் அவர் காஃபிராவார். இதைத்தான் ஷெய்க் கூறினார், இதை மற்ற இஸ்லாமிய இமாம்களும் கூறியுள்ளனர். இதனால் அவர் முஸ்லிம்களை காஃபிர்கள் என்று அறிவிக்கவில்லை. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. அவர் முஷ்ரிக்குகளை மட்டுமே தக்ஃபீர் செய்தார். முஷ்ரிக்குகளான அவர்கள் அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை வணங்குபவர்கள், அவற்றிற்காக அறுத்துப் பலியிடுபவர்கள், அவற்றின் மேல் சத்தியம் செய்பவர்கள், இறந்தவர்களிடம் உதவி தேடுபவர்கள். இவர்களைத்தான் ஷெய்க் காஃபிர்கள் என்று அறிவித்தார், அவர் இதில் தனியாக இல்லை. தூதர் (ஸல்) எதை நோக்கி அழைப்பு விடுத்தாரோ அதை நோக்கி மட்டுமே அவரும் அழைப்பு விடுத்தார். அவர் தவ்ஹீதின் பால் அழைத்தார் அத்துடன் அவர் ஷிர்க்கை தடை செய்தார். மேலும் உயர்ந்தவனான அல்லாஹ் கூறினான்:

وَاعْبُدُوا اللّٰهَ وَلَا تُشْرِكُوْا بِهٖ شَيْـًٔـــا ؕ

மேலும், அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனுக்கு யாதொன்றையும் இணையாக்காதீர்கள்,
(அல்குர்ஆன்: 4:36)

وَمَاۤ اَرۡسَلۡنَا مِنۡ قَبۡلِكَ مِنۡ رَّسُوۡلٍ اِلَّا نُوۡحِىۡۤ اِلَيۡهِ اَنَّهٗ لَاۤ اِلٰهَ اِلَّاۤ اَنَا فَاعۡبُدُوۡنِ

மேலும், நிச்சயமாக என்னைத் தவிர (வணக்கத்திற்குரிய) இறைவன் இல்லை, எனவே, என்னையே நீங்கள் வணங்க வேண்டும் என்று நாம் வஹீ அறிவிக்காமல் (நபியே!) உமக்கு முன்னர் எந்தத் தூதரையும் நாம் அனுப்பவில்லை.
(அல்குர்ஆன்: 21:25)

அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும், மேலும் அவனைத் தவிர மற்றவற்றை வணங்குவதை அவன் தடை செய்தான். இதை நோக்கித்தான் ஷெய்க் அழைத்தார். மேலும் இதுவே லா இலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருளாகும். இது ஒரு மறுப்பு மற்றும் உறுதிமொழியைப் பொருளாக கொண்டுள்ளது. இது ஷிர்க்கை மறுத்து தவ்ஹீதை உறுதிப்படுத்துகிறது. லா இலாஹ இல்லல்லாஹ் என்பதன் பொருள் இதுவல்லவா? இதுவே ஷெய்க்கின் தாஃவா ஆகும். அவர் ஷிர்க்கைத் தடை செய்து தவ்ஹீதைக் கொண்டு கட்டளையிட்டார். இது முஸ்லிம்களை காஃபிர்களாக அறிவிக்கிறதா? இது காஃபிர்களைக் காஃபிர்கள் என்று அறிவிக்கிறது. காஃபிர்களான அவர்கள் உயர்ந்தவனான அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவர்கள். மேலும் அவர்கள் தற்போதும் உள்ளனர். இதுவே கப்ருகள் மற்றும் கட்டப்பட்ட ஸியாரங்களில் அவர்களுடைய செயலாக இருக்கிறது; அவர்கள் எவ்வாறு தவறிழைக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். இப்போதும் அவர்கள் அபூ லஹப் மற்றும் அபூ ஜஹ்லின் காலத்தில் இஸ்லாத்திற்கு முந்தைய அறியாமை நாட்களில் மக்கள் செய்த அதே செயல்களின் மீது உள்ளனர். அவர்கள் அறியாமைக்கு முந்தைய இஸ்லாமிய நாட்களில் செய்தது போல் அல்லாஹ் அல்லாத பிறரை அழைக்கிறார்கள். அதற்கும் மேலாக இது கடுமையானதாக உள்ளது.

ஸுப்ஹானல்லாஹ், அவர்கள் அல்லாஹ் அல்லாதவர்களை வணங்கிக் கொண்டே "அவன் எங்களையா நிராகரிப்பவர்களாக அறிவித்தான்?" என்று கேட்கிறார்கள். அல்லாஹ் அல்லாத பிறரிடம் பிரார்த்தனை செய்பவன் முஸ்லிமா அல்லது காஃபிரா? அவனை காஃபிர் என்றும், முஷ்ரிக் என்றும் எல்லோரும் சொல்வார்கள். முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களின் தாஃவா என்பது அவருக்கு முன் வந்த தூதர்கள் மற்றும் இமாம்களின் தாஃவா ஆகும். இறைத் தூதர்களின் (அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் அருள் புரிவானாக) தஃவாவுக்கு மாறான எதை நோக்கியும் அவர் அழைக்கவில்லை. அது தவ்ஹீதுக்கான அழைப்பு, மேலும் ஷிர்க்கிற்கு எதிரான அழைப்பு ஆகும்.

மூன்றாவது சந்தேகம்

மூன்றாவது சந்தேகமாக ஷெய்க் முஸ்லிம்களைக் கொன்றார் என்று சொல்கிறார்கள். மேலும் இது முந்தைய சந்தேகத்தில் இருந்து வேறுபட்டதாக இருக்கிறது. அவர் முஸ்லிம்களைக் கொன்று அவர்களின் இரத்தமும் செல்வமும் அனுமதிக்கப்பட்டதாக அறிவித்தார் என்று அவர்கள் சொல்கிறார்கள். இது உண்மையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. ஷிர்க்கைக் கைவிட மறுத்து, அல்லாஹ்வின் பாதையைத் தடை செய்பவனுக்கு எதிராகப் போரிடப்படத் தகுதியில்லையா? உயர்ந்தவன் கூறினான்:

قَاتِلُوا الَّذِيْنَ لَا يُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَلَا بِالْيَوْمِ الْاٰخِرِ وَلَا يُحَرِّمُوْنَ مَا حَرَّمَ اللّٰهُ وَ رَسُوْلُهٗ وَلَا يَدِيْنُوْنَ دِيْنَ الْحَـقِّ مِنَ الَّذِيْنَ اُوْتُوا الْـكِتٰبَ حَتّٰى يُعْطُوا الْجِزْيَةَ عَنْ يَّدٍ وَّهُمْ صٰغِرُوْنَ

விசுவாசிகளே! வேதம் கொடுக்கப்பட்டவர்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொள்ளாமலும் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விலக்கியவைகளை விலக்கிக் கொள்ளாமலும், இந்த உண்மை மார்க்கத்தை மார்க்கமாக ஏற்காமலும் இருக்கின்றனரே, அத்தகையோரை-இழிவடைந்தவர்களாக அவர்கள் தங்கள் (கையால் ஜிஸ்வா) வரியை கொடுக்கும்வரை நீங்கள் (அவர்களுடன்) யுத்தம் புரியுங்கள்.
(அல்குர்ஆன்: 9:29)

وَقَالَتِ الْيَهُوْدُ عُزَيْرُ ۨابْنُ اللّٰهِ وَقَالَتِ النَّصٰرَى الْمَسِيْحُ ابْنُ اللّٰهِ‌ ؕ ذٰ لِكَ قَوْلُهُمْ بِاَ فْوَاهِهِمْ‌ ۚ يُضَاهِـُٔوْنَ قَوْلَ الَّذِيْنَ كَفَرُوْا مِنْ قَبْلُ‌ ؕ قَاتَلَهُمُ اللّٰهُ‌ ۚ اَنّٰى يُؤْفَكُوْنَ

மேலும், யூதர்கள் ‘உஜைர்’ அல்லாஹ்வுடைய மகன் என்று கூறுகின்றனர், கிறிஸ்தவர்கள் “மஸீஹ்” அல்லாஹ்வுடைய மகன் என்றும் கூறுகின்றனர், அது இவர்கள் தங்கள் வாய்களால் கூறும் கூற்றே ஆகும், இவர்களுக்கு முன்னிருந்த நிராகரிப்போரின் கூற்றுக்கு (கூற்றால் அவர்களைப் போன்று) ஒத்திருக்கிறார்கள், அல்லாஹ் இவர்களை அழித்து விடுவானாக! (சத்தியத்தைப் புறக்கணித்து) இவர்கள் எங்கு திருப்பப்படுகிறார்கள்? (அல்குர்ஆன்: 9:30)

மேலும் உயர்ந்தவன் கூறினான்:

فَاقْتُلُوا الْمُشْرِكِيْنَ حَيْثُ وَجَدْتُّمُوْهُمْ وَخُذُوْهُمْ وَاحْصُرُوْهُمْ وَاقْعُدُوْا لَهُمْ كُلَّ مَرْصَدٍ ۚ فَاِنْ تَابُوْا وَاَقَامُوا الصَّلٰوةَ وَ اٰتَوُا الزَّكٰوةَ فَخَلُّوْا سَبِيْلَهُمْ ؕ

அவர்களைக் கண்டவிடமெல்லாம் கொன்றுவிடுங்கள், இன்னும், அவர்களைப் பிடியுங்கள், அவர்களை முற்றுகையிடுங்கள், ஒவ்வொரு பதுங்குமிடத்திலும், அவர்களைக் குறிவைத்து உட்காருங்கள், பின்னர் அவர்கள் (தங்கள் பாவங்களுக்கு) பச்சாதாபப்பட்டு விலகி, (விசுவாசித்துத் தொழுகையையும் நிறைவேற்றி ஜகாத்தையும் கொடுத்து வந்தால், அவர்கள் வழியில் (அவர்களை) விட்டு விடுங்கள்,
(அல்குர்ஆன்: 9:5)

மேலும் மற்றொரு வசனத்தில் அவன் கூறுகிறான்:

فَاِنْ تَابُوْا وَاَقَامُوا الصَّلٰوةَ وَاٰتَوُا الزَّكٰوةَ فَاِخْوَانُكُمْ فِى الدِّيْنِ‌ؕ وَنُفَصِّلُ الْاٰيٰتِ لِقَوْمٍ يَّعْلَمُوْنَ

ஆகவே, அவர்கள் (தங்கள் பாவங்களிலிருந்து விலகிப்) பச்சாதாபப்பட்டு தொழுகையையும் நிறைவேற்றி, ஜகாத்தையும் கொடுத்து வந்தால் அப்பொழுது (அவர்கள்) உங்களுக்கு மார்க்கத்தில் சகோதரர்களாவர், இன்னும், அறிவுள்ள சமூகத்தார்க்கு நாம் வசனங்களை (இவ்வாறு) விவரிக்கின்றோம்.
(அல்குர்ஆன்: 9:11)

நம்மிடம் இயலுமையும் வலிமையும் இருந்தால், அவற்றைக் கொண்டு முஷ்ரிக்குகளுடன் போரிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான்; அல்லாஹ்வின் வார்த்தையை உயர்ந்ததாக ஆக்குவதற்காகவும், ஷிர்க்கை நீக்குவதற்காகவும். இணைவைப்பாளர்களுக்கு எதிராகப் போரிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். மேலும் ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப், அல்லாஹ் நமக்குப் போர் செய்யக் கட்டளையிட்ட முஷ்ரிக்குகளுடன் மட்டுமே போரிட்டார். மேலும், அவர் அவர்களை எதிர்த்து போரைத் தொடங்கவில்லை; அவர்களே அவருக்கு எதிராக வரம்பு மீறினார்கள், அவரது முகத்தில் ஏறி நின்று அவரது தஃவாவைத்

தடை செய்தார்கள், மக்களை அவரது தஃவாவை ஏற்க விடாமல் தடுத்தார்கள். அவர்களுடன் சண்டையிடத் தனக்கு இயலுமை இருக்கும்போது; மக்களையும், மண்ணையும் அழித்தொழிக்க அவர்களை விட்டுவிட்டு, ஷெய்க் எங்காவது சென்றிருக்க வேண்டுமா? இது அல்லாஹ் கடமையாக்கிய கடமையாகும். உயர்ந்தவன் கூறினான்:

وَقَاتِلُوا الْمُشْرِكِيْنَ ۖ

இன்னும், இணைவைப்பவர்களுடன் (முஷ்ரிகீன்களுடன்) போர் செய்யுங்கள்,
(அல்குர்ஆன்: 9:36)

மேலும் தூதர் (ஸல்) கூறினார்:

“ அல்லாஹ்வின் பெயரால் உங்கள் தாக்குதல்களை அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளுங்கள். அல்லாஹ்வை நிராகரிப்பவர்களான அவர்களுடன் போராடுங்கள்.” [முவத்தா மாலிக் 972]

அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குவதால், நிராகரிப்பவர்களுடனும், இணைவைப்பாளர்களுடனும் போரிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். மேலும் மார்க்கம் உயர்ந்தவனான அல்லாஹ்வுகு மட்டுமே உரியது.

எனவே அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவர்கள் சத்தியத்தை ஏற்று அதன் பக்கம் திரும்பாவிட்டால் அவர்களுடன் போரிடுவது கடமையாகும்; இதை நடைமுறைப்படுத்தாவிட்டால் இஸ்லாம் பரவாது. தஃவா மற்றும் ஜிஹாத் மூலமே இஸ்லாம் பரவுகிறது. அல்லாஹ்வின் பாதையில் அழைத்தல் அத்துடன் அல்லாஹ்வின் பாதையில் போரிடுதல், இதைக் கொண்டுதான் அல்லாஹ் தன் தூதர்களை அனுப்பினான் (அல்லாஹ் அவர்கள் அனைவர் மீதும் ஈடேற்றமும் அருளும் புரிவானாக). மேலும் ஷெய்க் யாருக்கு எதிராகவும் வரம்பு மீறவில்லை, ஒரு முஸ்லிமைக் கூட அவர் கொல்லவில்லை. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது.

அவர் முஷ்ரிக்கீன்களையும், சத்தியத்தை ஏற்றுக்கொள்ள விடாமல் தடுப்பவர்களையும் மட்டுமே கொன்றார். மேலும் அவர் கப்ருகளை வணங்குபவர்கள் மற்றும் மக்களை ஷிர்க்கின் மீது நிலைத்திருக்குமாறு அழைப்பவர்களை நோக்கி புத்தகங்களை எழுதினார். இவ்வாறான நபர்களைப் போன்றவர்களை ஒவ்வொரு காலகட்டத்திலும் இடத்திலும் எதிர்த்துப் போராட வேண்டியது கடமையாகும். இறைத்தூதர்கள் அவர்களுக்கு எதிராகப் போரிட்டனர், இமாம்கள் மற்றும் தலைவர்கள் அவர்களுக்கு எதிராகப் போரிட்டனர், அவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் போரிட்டனர். ஷிர்க்கில் விடாப்பிடியாக இருந்தவர்களையும், நிராகரிப்பில் நிலைத்திருப்பவர்களையும், இணைவைப்பாளர்களின் அகீதாவைப் பாதுகாத்து அதை மண்ணில் பரப்ப விரும்பியவர்களையும் எதிர்த்துப் போரிட்டவர் ஷெய்க் மட்டுமல்ல.

ஷெய்க்கினால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் முஸ்லிம்கள் எங்கே?, அல்லாஹ்வை வணங்கி மேலும் அவனுடன் யாரையும் இணையாக்காதவரை ஷெய்க் கொன்றாரா?, ஒருபோதும் இல்லை!. அல்லாஹ்வைத் வணக்கத்தில் தனித்துவப்படுத்தி அவனை மட்டுமே வணங்கி, தொழுகையை நிலைநாட்டி, தர்மம் செய்து மார்க்கத்தை கடைபிடிக்கும் முஸ்லிம்களுக்கு எதிராகவா ஷெய்க் ஜிஹாதினை மேற்கொண்டார்?, இது உண்மையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. மாறாக அவர் அவர்களுக்கு உதவி செய்தார், அவர்களுக்கு ஒத்துழைத்தார் மேலும் மார்க்கத்தைக் கடைப்பிடிப்பதில் அவர்களுக்குத் துணையாக நின்றார். பிடிவாதமாக இருந்தவர்களும், நிராகரிப்பாளர்களும், அல்லாஹ்வுக்கு இணைவைத்தவர்களுமாக இருந்தவர்களைப் பொறுத்தவரை, அப்போது (வரலாற்றில்) ஷெய்க் மட்டுமே அவர்களுக்கு எதிராகப் போராடவில்லை. (முஸ்லீம்களின்) விவகாரங்களுக்கும் பொறுப்பானவர்கள் அனைவருக்கும், அவர்களுக்கு இணைவைப்பாளர்களுடன் போரிடும் இயலுமை இருக்குமென்றால்

அப்போது அவர் அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் அதைச் செய்ய வேண்டியது அவர் மீது கடமையாகும்.

فَاقْتُلُوا الْمُشْرِكِيْنَ حَيْثُ وَجَدْتُّمُوْهُمْ

இ ணை வை த்து க் கொ ண்டி ரு ப்போ ரை – அ வ ர்க ளை க் கண்டவிடமெல்லாம் கொன்றுவிடுங்கள்,
(அல்குர்ஆன்: 9:5)

وَقَاتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ كُلُّهٗ لِلّٰهِ‌ۚ

(விசுவாசிகளே! இந்நிராகரிப்போரின் துன்புறுத்தலெனும்) குழப்பம் ஏற்படாமல் (இருக்கவும்,) மார்க்கம் அது முற்றிலும் அல்லாஹ்விற்கு (நிலைபெற்றதாக) ஆகும் வரையிலும் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும் அவர்களுடன் யுத்தம் புரியுங்கள்,
(அல்குர்ஆன்: 8:39)

இது உயர்ந்தவனான அல்லாஹ்வின் கட்டளையாகும். இது ஷெய்க்கின் கட்டளையா அல்லது அல்லாஹ்வின் கட்டளையா? இது உயர்ந்தவனான அல்லாஹ்வின் கட்டளையாகும்.

وَقَاتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ كُلُّهٗ لِلّٰهِ‌ۚ

(விசுவாசிகளே! இந்நிராகரிப்போரின் துன்புறுத்தலெனும்) குழப்பம் ஏற்படாமல் (இருக்கவும்,) மார்க்கம் அது முற்றிலும் அல்லாஹ்விற்கு (நிலைபெற்றதாக) ஆகும் வரையிலும் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும் அவர்களுடன்) யுத்தம் புரியுங்கள்,
(அல்குர்ஆன்: 8:39)

இணைவைப்போர் மக்களுக்கு இன்னல்களை உண்டாக்கி, அவர்களை மார்க்கத்திலிருந்து தடுக்கிறார்கள்.

وَقَاتِلُوْهُمْ حَتّٰى لَا تَكُوْنَ فِتْنَةٌ وَّيَكُوْنَ الدِّيْنُ كُلُّهٗ لِلّٰهِ‌ۚ

(விசுவாசிகளே! இந்நிராகரிப்போரின் துன்புறுத்தலெனும்) குழப்பம் ஏற்படாமல் (இருக்கவும்,) மார்க்கம் அது முற்றிலும் அல்லாஹ்விற்கு

(நிலைபெற்றதாக) ஆகும் வரையிலும் (மக்காவாசிகளாகிய நிராகரிக்கும் அவர்களுடன்) யுத்தம் புரியுங்கள்,
(அல்குர்ஆன்: 8:39)

ஏனென்றால், அல்லாஹ் படைப்பை படைத்தது அவனை வணங்குவதற்காகவே ஆகும். உயர்ந்தவன் கூறினான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

மேலும், ஜின்களையும், மனிதர்களையும் என்னை அவர்கள் வணங்குவதற்காகவே தவிர நான் படைக்கவில்லை.
(அல்குர்ஆன்: 51:56)

அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவரைப் பொறுத்தவரை, அவரை தவ்ஹீதுக்கு அழைப்பது கடமையாகும். அவர் இணங்கி சத்தியத்திற்குத் திரும்பினால், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது, இல்லையென்றால் அவருக்கு எதிராகப் போரிடுவது கடமையாகும். சில அறிஞர்கள் ஜிஹாதை இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாக கருதுகின்றனர். நபி (ஸல்) கூறினார்:

"காரியங்களில் தலையாயது இஸ்லாம் ஆகும், அதன் தூண் தொழுகை ஆகும், மேலும் அதன் உச்சம் ஜிஹாத் ஆகும்." (அல் புகாரி 281)

அல்லாஹ்வின் பாதையிலான ஜிஹாத் என்றால் என்ன? ஜிஹாத் என்றால் உலக வாழ்க்கை, பதவிகள், அல்லது ஒரு நாட்டைக் கைப்பற்றும் ஆசையா? இல்லை, மாறாக அல்லாஹ்வின் வார்த்தையை உயர்ந்ததாக ஆக்குவது தான் ஜிஹாத் ஆகும்.

"அல்லாஹ்வின் வார்த்தையை உயர்ந்ததாக ஆக்குவதற்காக யார் போராடுகிறாரோ அப்போது அவர் அல்லாஹ்வின் பாதையிலேயே போராடுகிறார்." (ஸஹீஹ் முஸ்லிம் 1904)

(கப்ரு வணங்கிகளான) இணைவைப்பாளர்களுடன் போரிடுவதன் மூலம் ஷெய்க் குர்ஆன், சுன்னா மற்றும் முஸ்லிம்களின் ஒருமித்த கருத்தை மட்டுமே பின்பற்றினார். சத்தியத்தை ஏற்க மறுத்து, ஷிர்க் மற்றும் நிராகரிப்பை நாடு முழுவதும் பரப்ப வேண்டும் என்று விரும்பியவர்களான இவர்கள்தான் ஷெய்க்கினால் எதிர்த்துப் போரிடப்பட்டவர்கள். ஆனால் அவர் முஸ்லிம்களைக் கொன்றார் என்று கூறுவது போல், அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர் ஒரு முஸ்லிமையும் கொல்லவில்லை. முஷ்ரிக்குகள் மற்றும் காஃபிர்களுக்கு எதிராக மட்டுமே சண்டை இருந்தது, அவர்கள் உயர்ந்தவனான அல்லாஹ்வைத் தவிர வேறு வணக்கத்தில் தொடர்ந்திருக்க விரும்பினார்கள். இதனால்தான் ஷெய்க் அவர்களுடன் போரிட்டாரே தவிர பதவி, செல்வம் அல்லது ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக அல்ல. ஷெய்க்கைத் தவிர அவர்களை மறுப்பதற்காக அல்லாஹ் மற்றவர்களையும் அனுப்பினான். நஜ்திற்கு வெளியே உள்ள மக்களிடமிருந்து அவர்களுக்கு எதிராக மறுப்புகள் உள்ளன, அதற்கும் மேலாக அரேபிய தீபகற்பத்திற்கு வெளியே உள்ள மக்களிடமிருந்து அவர்களுக்கு எதிராக மறுப்புகள் உள்ளன. எகிப்து மக்கள் அவற்றை மறுத்தார்கள், சூடான் மக்கள் மறுத்தார்கள், இந்திய மக்கள் மறுத்தார்கள், பெரும்பாலான மக்கள் மறுத்தார்கள் மேலும் மறுப்புகள் உள்ளன. அவர்கள் ஷாம் மக்களால் மறுக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் அவற்றை மறுத்தார்கள், அவர்களின் புத்தகங்கள் அறியப்படுகின்றன அத்துடன் அவை இன்றும் உள்ளன. உண்மை தெளிவாக உள்ளது, எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்லாஹ் தன் மார்க்கத்திற்கு உதவி செய்பவர்களை அனுப்பியுள்ளான்.

وَاِنْ تَتَوَلَّوْا يَسْتَبْدِلْ قَوْمًا غَيْرَكُمْ ۙ ثُمَّ لَا يَكُوْنُوْۤا اَمْثَالَـكُمْ ۚ

நீங்கள் புறக்கணிப்பீர்களானால், (உங்களை அழித்து) உங்களையல்லாத (வேறு) சமூகத்தாரை (உங்கள் இடத்தில்) அவன் மாற்றி விடுவான், பின்னர், அவர்கள் உங்களைப் போன்றோராக இருக்கமாட்டார்கள். (அல்குர்ஆன்: 47:38)

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا مَنْ يَّرْتَدَّ مِنْكُمْ عَنْ دِيْـنِهٖ فَسَوْفَ يَاْتِى اللّٰهُ بِقَوْمٍ يُّحِبُّهُمْ وَيُحِبُّوْنَهٗۤ ۙ اَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِيْنَ اَعِزَّةٍ عَلَى الْكٰفِرِيْنَ يُجَاهِدُوْنَ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَلَا يَخَافُوْنَ لَوْمَةَ لَاۤٮِٕمٍ‌ ؕ ذٰ لِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ‌ ؕ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

விசுவாசங்கொண்டோரே! உங்களிலிருந்து எவர் தன் மார்க்கத்தைவிட்டும் மாறிவிடுவாரானால் (அப்பொழுது அவர்களுக்குப் பகரமாக) வேறு சமூகத்தாரை அல்லாஹ் கொண்டு வருவான் .. அவன் அவர்களை நேசிப்பான், அவர்களும் அவனை நேசிப்பார்கள், அவர்கள், விசுவாசங் கொண்டவர்களிடம் இரக்கம் காட்டுபவர்கள், நிராகரிப்பவர்களிடம் கண்டிப்பாக நடந்து கொள்கிறவர்கள், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவார்கள், இன்னும் பழிப்பவரின் பழிப்புக்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள், இது அல்லாஹ்வின் பேரருளாகும், அவன் நாடியவர்களுக்கு இதனை அவன் கொடுக்கின்றான், மேலும், அல்லாஹ் மிக விசாலமானவன், (யாவரையும்) நன்கறிகிறவன்.
(அல்குர்ஆன்: 5:54)

இதை அவர்களது மிகப்பெரிய சந்தேகமாக கொண்டு அவரது தஃவாவிற்கு எதிராக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர், மேலும் அவர் இந்த சந்தேகத்தை மறுத்தார், ரஹிமஹுல்லாஹ் மற்றும் அவரது மாணவர்கள் இந்த சந்தேகத்தை மறுத்தார்கள், அதைப் போலவே பல்வேறு இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மறுத்தார்கள். அவர்களின் மறுப்புகள் உள்ளன; அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவற்றைப் பற்றி கேட்பது மற்றும் அவற்றைப் படிப்பது மட்டுமே. மேலும் இது அல்லாஹ்வின் படைப்பின் சுன்னாவாகும். பொய் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சத்தியத்துக்கு உதவப்படும் என்பதை அவன் விதியாக்கி இருக்கிறான். நபி (ஸல்) சொன்னது போல்:

"எனது உம்மத்தில் இருந்து ஒரு கூட்டமானது பகிரங்கமாக சத்தியத்தின் மீது நிலைத்திருப்பதிலிருந்து ஒருபோதும் நின்றுவிடாது; அல்லாஹ்வின் ஆணை (இறுதி நாள்) வரும் வரை அவர்களைக் கைவிடுபவர்களால் அவர்களுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது." (திர்மிதி 2229)

ஷெய்க் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் புதிய மத்ஹபுடன் வந்ததாகச் சொல்பவருக்கு நான் சவால் விடுகிறேன். இந்த மத்ஹபைக் கொண்டு வந்து எங்களுக்குத் தெளிவுபடுத்துங்கள் என்று நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன். ஷெய்க் முஸ்லிம்களை காஃபிர்கள் என்று அறிவித்தார் என்று கூறுபவருக்கு நான் சவால் விடுகிறேன். ஷெய்க் பல முஸ்லிம்களைக் கொன்றார் என்று கூறுவது இருக்கட்டும்; ஷெய்க் ஒரு முஸ்லிமையாவது கொன்றார் என்று கூறுபவருக்கு நான் சவால் விடுகிறேன். ஷெய்க் முஸ்லிம்கள் மீது தக்ஃபீர் செய்தார் என்று சொல்பவருக்கு நான் சவால் விடுகிறேன்; மாறாக கப்ரை வணங்குபவர்கள், ஸியாரங்களை வணங்கி வழிபாடு செய்பவர்கள் மற்றும் இணைவைப்பாளர்கள் மீது மட்டுமே தக்ஃபீர் செய்தார். மேலும் இந்த நபர்கள் குர்ஆன், சுன்னா மற்றும் அறிஞர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் நிராகரிப்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்களாவர்.

ஷெய்க் இதை உச்சபட்சமாக நிலைநாட்டினார், மேலும் அவர் கூலியை எதிர்பார்த்து பொறுமையாக இருந்தார்; அவ்வேளையில் சில அறிஞர்கள் அமைதியாகவும், ஓய்வெடுத்துக் கொண்டும் இருந்தனர். ஒருவேளை அவர்கள் கூறுவார்கள்: “ஷெய்க்கின் காலத்தில் வேறு அறிஞர்களும் இருந்தார்கள் தானே, அவர் மட்டும் ஏன் இதனுடன் குறிப்பாக்கப்படுகிறார்?” - நாம் கூறுகிறோம்: இது அல்லாஹ் வழங்கிய சிறப்பாகும்; அவன் விரும்பியவருக்கு அதைக் கொடுக்கிறான். அவர் காலத்தில் அறிஞர்கள் இருந்தார்கள், ஆம் நஜ்த் தேசத்தில் அறிஞர்கள் ஏராளமாக இருந்தனர். ஆனால் அவர்கள் இந்த விவகாரத்தை நிலைநாட்டவில்லை.

மாறாக அவர்கள் அகீதா அல்லது தவ்ஹீதுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஓய்வெடுத்துக்கொண்டு ஃபிக்ஹ் புத்தகங்களின் மீது அக்கறை செலுத்திக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ் அவர்களை அதிலிருந்து (அதாவது அகீதா அல்லது தவ்ஹீதை நிலை நாட்டுவதிலிருந்து) தடுத்தான், அதே சமயம் அவன் ஷெய்கிற்கு நன்மை செய்தான். அவருடைய காலத்தில் அறிஞர்களுக்கு பொறுமை இருக்கவில்லை, சகிப்புத்தன்மை இருக்கவில்லை, நரம்புகள் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் பொய்யை நேசித்தார்கள் என்று நான் கூறவில்லை, ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு பொறுமை இருக்கவில்லை, அவர்களில் சிலர் விரக்தியடைந்திருந்தனர் என்று நாங்கள் கூறுகிறோம்.

ஷெய்க்கைப் பொறுத்தவரை; அல்லாஹ் அவருக்கு வலுவான நம்பிக்கையையும், வலுவான அறிவையும், வலுவான வாதத்திறமையையும் வழங்கினான். துன்பங்களைத் சகித்துக் கொண்டார், பொறுமையாக இருந்தார். மேலும் அவர் இந்த விவகாரத்தை நிலைநாட்டினார். இந்த நாட்டிற்காகவும் முஸ்லிம்களின் மண்ணிற்காகவும் அவர் ஆற்றிய சேவையை மறுக்க முடியாது. மேலும் கியாமத் நாள் வரை அவரைப் பின்பற்றுபவர்களின் கூலியும் வெகுமதியும் அவருக்குக் கிடைக்கும் என்று நம்புகிறோம். நபி (ஸல்) சொன்னது போல்:

யாரேனும் நேர்வழியைப் பின்பற்றுமாறு மற்றவர்களை அழைத்தால் அதைப் பின்பற்றுபவர்களின் நன்மைக்குச் சமமானது அ(ந்நேர்வழியை நோக்கி அழைத்த)வருக்கு உண்டு. அதற்காக அவர்களது (பின்பற்றியவர்களின்) நன்மையில் எதுவும் குறைந்துவிடாது. யாரேனும் வழிகேட்டைப் பின்பற்றுமாறு மற்றவர்களை அழைத்தால் அதைப் பின்பற்றுபவர்களின் தீமைக்குச் சமமானது அவருக்கு உண்டு. அ(தன்படி செயல்பட்ட)வர்களின் தீமையிலிருந்து எதுவும் குறையாது. (ஸஹீஹ் முஸ்லிம் 2674)

மேலும் அல்லாஹ் சிறப்புக்களை தான் நாடியவர்களுக்கு வழங்குகிறான். ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்த மார்க்கத்தை நிலைநாட்டி அதை நோக்கி அழைப்பு விடுக்கும் ஒருவரை அல்லாஹ் இந்த உம்மத்திற்கு - அவனுடைய தயவினாலும் கருணையினாலும் ஒரு நலவாக விதித்துள்ளான். நபி (ஸல்) சொன்னது போல்:

“என்னுடைய உம்மத்திலிருந்து ஒரு கூட்டமானது சத்தியத்தின் மீது பகிரங்கமாக நிலைத்திருப்பதை ஒருபோதும் நிறுத்தாது." (அத்-திர்மிதி 2229)

மேலும் உயர்ந்தவன் அல்லாஹ் கூறினான்:

وَ جَعَلْنَا مِنْهُمْ اَىِٕمَّةً يَّهْدُوْنَ بِاَمْرِنَا لَمَّا صَبَرُوْا ؕ وَ كَانُوْا بِاٰيٰتِنَا يُوْقِنُوْنَ

மேலும், அவர்கள் பொறுமையாக இருந்த பொழுது, நம்முடைய கட்டளையைக் கொண்டு நேர்வழி நடப்பவர்களான தலைவர்களையும் அவர்களிலிருந்து நாம் ஆக்கினோம், அவர்கள் நம்முடைய வசனங்களை உறுதி கொள்பவர்களாகவும் இருந்தனர்.
(அல்குர்ஆன்: 32:24)

நான்காவது சந்தேகம்

நான்காவது சந்தேகம்: வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் தகுதி இல்லை என்று கூறி, தொழுது, தர்மம் செய்து, நோன்பு இருந்து, ஹஜ் செய்து, அல்லாஹ்வை வணங்கி வந்த ஒரு மக்களுக்கு எதிராக ஷெய்க் போரிட்டார் என்பதாகும்.

பதில்: இந்த நபர்கள் 'அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணங்கப்படுவதற்கு உரிமை இல்லை' என்று கூறி தொழுகையையும், ஏனைய வணக்கங்களையும் செய்தனர். ஆனால், அவர்கள் பெரிய ஷிர்க்கின் மூலம் 'அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணங்கப்பட உரிமை இல்லை' என்ற தங்களுடைய அந்த கூற்றை விட்டும் நீங்கி, தங்கள் தொழுகையும் ஏனைய வணக்கங்களையும் ரத்து செய்தனர். இறந்தவர்களிடம் பிரார்த்தனை செய்தல், பலியிடுதல், சத்தியம் செய்தல், கப்ருகளைச் சுற்றி தவாப் செய்தல் போன்றன அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றை வணங்குவது ஆகும். 'அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணங்கப்பட உரிமை இல்லை' என்ற கூற்றின் அர்த்தம், அவர்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்குவார்கள் என்பதாகும், ஆனால் அவர்கள் அல்லாஹ் அல்லாதவர்களை வணங்கினார்கள். அதன் விளைவாக, 'அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணக்கத்திற்குரிய உரிமை இல்லை' என்ற கூற்றினால் அவர்கள் பயனடையவில்லை. மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

"வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் உரிமை இல்லை" என்று கூறி, மேலும் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவற்றை நிராகரித்தவர், அவருடைய செல்வமும் இரத்தமும் புனிதமானவை, அவருனுடைய கணக்கு அல்லாஹ்விடம் உள்ளது." (ஸஹீஹ் முஸ்லிம் 23)

(ஆனால் கப்ரு வணங்கிகளான) இந்த நபர்கள் அல்லாஹ்வையன்றி வணங்கப்படும் மற்றவற்றை நிராகரிக்கவில்லை. மேலும் உயர்ந்தவன் அல்லாஹ் கூறினான்:

لَاۤ اِكْرَاهَ فِى الدِّيْنِ‌ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَىِّ‌ۚ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْۢ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى لَا انْفِصَامَ لَهَا‌ ؕ

(சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை. (ஏனெனில்) வழிகேட்டிலிருந்து நேர்வழி திட்டமாகத் தெளிவாகி விட்டது. ஆகவே, எவர் தாகூத்தை (ஷைத்தானை) நிராகரித்து விட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவர் திட்டமாக அறுந்துபோகாத பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்.
(அல்குர்ஆன்: 2:256)

அவன் அல்லாஹ்வை நம்புவதற்கு முன் பொய்யான தெய்வங்களை நிராகரிக்குமாறு குறிப்பிட்டான். மேலும் அல்லாஹ் அல்லாதவர்களை வணங்குபவர் தாகூத்தை நிராகரிக்கவில்லை.

‘அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணங்கப்பட உரிமை இல்லை’ என்பதன் பொருள் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவதற்கு வேறு எதுவும் சத்தியமாக இல்லை என்பதாகும். எனவே இது ஒரு மறுப்பு மற்றும் உறுதிமொழியைக் கொண்டுள்ளது. இது அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் வணக்கத்தை மறுக்கிறது மேலும் அது அல்லாஹ்வுக்கான வணக்கத்தை உறுதிப்படுத்துகிறது. அதைக் கூறக்கூடிய மற்றொரு வழி; கப்ருகள், சிலைகள், பாறைகள், மரங்கள், ஜின்கள், மனிதர்கள், மலக்குகள், நபிமார்கள் மற்றும் தூதர்கள் என்று வணங்கப்படும் அனைத்தையும் அது செல்லுபடியற்றதாக ஆக்குகிறது; பங்காளர்கள் இல்லாமல் அல்லாஹ்வுக்கு மட்டுமே வணக்கம் உரியது என்பதை அது உறுதிப்படுத்துகிறது. உயர்ந்தவனான அல்லாஹ் தன் நபியிடம் (ஸல்) கூறினான்:

وَلَـقَدْ اُوْحِىَ اِلَيْكَ وَاِلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكَ‌ۚ لَـئِنْ اَشْرَكْتَ لَيَحْبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

(நபியே!) "நீர் இணைவைத்தால் நிச்சயமாக உம்முடைய செயல்(கள் யாவும்) அழிந்துவிடும், நிச்சயமாக நீர் நஷ்டமடைபவர்களிலும் ஆகிவிடுவீர்" என உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் (வஹீ) அறிவிக்கப்பட்டது.
(அல்குர்ஆன்: 39:65)

ஆகவே, எவர் அல்லாஹ்வுக்கு பெரிய ஷிர்க்கைக் கொண்டு இணைவைத்தாலும், அப்போது அவர்களுடைய செயல்கள் அனைத்தையும் தொழுகையையும் மற்ற அனைத்து செயல்களையும் உள்ளடக்கி அது செல்லுபடியற்றதாக ஆக்கிவிடுகிறது. அவர்களின் இரத்தமும் செல்வமும் இனி புனிதமானது அல்ல. மேலும் இது அல்லாஹ்வின் வேதத்திலும், அவனது தூதரின் (ஸல்) சுன்னாவிலும், நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் வழிகாட்டுதலிலும் தெளிவாக உள்ளது. (கலீஃபாக்களான) அவர்கள் அல் யமாமா மக்களுக்கு எதிராக; அவர்கள் 'அல்லாஹ்வைத் தவிர வேறு எதற்கும் வணங்கப்பட உரிமை இல்லை' என்றும் 'முஹம்மது அல்லாஹ்வின் தூதர்' என்றும் கூறிக் கொண்டிருந்த போதே போரிட்டார்கள். ஏனென்றால் அவர்கள் மேலதிகமாக முஸைலிமாவும் ஒரு நபிதான் என்று கூறினார்கள். இவ்வாறு அவனது நபித்துவத்தை நம்பியவரே காஃபிராக அறிவிக்கப்பட்டு, எதிர்த்துப் போரிடப்பட்டால், வணக்கத்தில் அல்லாஹ்வுக்குப் பங்காளர் உண்டு என்று கூறுபவன் எப்படி நிராகரிப்பாளனாக அறிவிக்கப்படாமலும் எதிர்த்துப் போரிடப்படமாலும் விடப்பட முடியும்?

மேலும் அல்லாஹ்வின் ஈடேற்றமும் அருளும் நமது நபிகள் நாயகம் முஹம்மது மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது தோழர்கள் மீது உண்டாவதாக.

(முற்றும்)